Registered as a NewsPaper

வ்லை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி -18 04-11-2003 செவ்வாய்க்கிழமை ஓசை 259

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-48A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
077-6059672

# புலிகளின் திட்டவரைவைப் படிக்கட்டாக்கி

# சமாதானப் பேச்சுக்கள் தொடங்கவேண்டும்

## அமெரிக்கத்தூதரகம் அறிவிப்பு

**வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாகத்திற்குப் புலிகள் முன்வைத்துள்ள வரைவுகளைப் படிக்கட்டாகக் கொண்டு மேலும் முன்னேறி அமைதிப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டுமென சிறிலங்காவுக்கான அமெரிக்கத் தூதரகம் இருதரப்பினரையும் கேட்டுள்ளது.**

விடுதலைப்புலிகள் கடந்த வெள்ளிக்கிழமை இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை நகல் திட்டத்தினை நோர்வே அரசிற்கூடாக சிறிலங்கா அரசாங்கத்திற்குச் சமர்ப்பித்திருந்தமை தெரிந்ததே.

புலிகள் முன்வைத்துள்ள இவ் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து அமெரிக்கா பாராட்டுதல்களைத் தெரிவித்துள்ளது.

நேற்று இதுதொடர்பாக அமெரிக்கத் தூதரகம் விடுத்த அறிக்கையில், வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக சபைக்கு அரசாங்கம் முன்வைத்த திட்டவரைவுக்கு பதிலாகப் புலிகள் தமது திட்ட வரைவை முன்வைத்துள்ளனர். இந்தத் திட்ட வரைவை படிக்கல்லாக வைத்துக்கொண்டு அமைதிப் பேச்சுவார்த்தைகளை இரு தரப்பும் ஆரம்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இறுதியான

(8ஆம் பக்கம் பார்க்க)

## அமெ - சிறிலங்கா விமானப்படை இடையில் ஒத்துழைப்புப் பரிமாற்றம்!

அமெரிக்க விமானப்படையும், சிறிலங்கா விமானப்படையும் ஒத்துழைப்புக்களை பரிமாற்றிக் கொள்ளவிருக்கின்றன. இந்த மாத இறுதியில் இந்த நிகழ்வு இடம்பெறவிருப்பதாக அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது. இதனடிப்படையில் அமெரிக்க விமானப் படையின் இயந்திரவியலாளர், வைத்தியர் என பல்வேறு துறைகளிலும் பணியாற்றும் வீரர்கள் இலங்கையில் விமானப் படையினருடன் இணைந்து பயிற்சிகளிலும், நடவடிக்கைகளிலும் ஈடுபடவிருக்கின்றனர். அத்துடன் விமானப் படை தொடர்பான திட்ட மிடல்களிலும் இவர்கள் ஈடுபட இருக்கின்றனர். (32)

## புலிகளின் திட்டத்தில் சில திருத்தங்கள் தேவை

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக நகல் திட்டத்தில் சில யோசனைகளை திருத்த வேண்டியுள்ளதால் விடுதலைப் புலிகளோடு கலந்தாலோசித்து பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியும் என அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சில பிரச்சினைகளில் பிணக்குகள் ஏற்பட்டால் இரண்டு பகுதியினரும் பேசித் தீர்மானம் எடுப்பதில் முட்டுக் கட்டைகள் ஏற்படாது எனவும், தற்போதைய அரசும் விடுதலைப் புலிகளும் இரண்டு வருட கால யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதினால் சகல மக்களும் சந்தோஷமாக வாழ்கின்றனர். இது சமாதானத்திற்கும் நாட்டிற்கும் கிடைத்த வெற்றியாகும். இதை நாங்கள் எல்லோரும் பயன்படுத்தி சமாதானத்தை முன்னெடுத்துச் செல்வோம் என அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் மேலும் குறிப்பிட்டார்.

## குடும்பப் பெண் ஒருவரை ஒருவாரமாகக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

குருநகரில் குடும்பப்பெண் ஒருவர் காணாமற்போயுள்ளார்.

கடந்த 26ஆம் திகதி முதல் 45 வயதான எட்வேட் மரியம்மா (6ஆம் குறுக்குத்தெரு குருநகர்) என்பவரே காணாமற்போயுள்ளார்.

இவரது குடும்பத்தினர் இவரைக்கண்டுபிடித்துத்தருமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிட்டுள்ளனர். (33)

## 2004இல் வருமானம் 349 பில். ரூபா செலுத்த வேண்டிய கடன் 314 பில். ரூபா

(கொழும்பு)

எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தின்படி அரசாங்கத்தின் வருமானம் 349 பில்லியன் ரூபா. அதில் 314 பில்லியன் ரூபாய்களை ஏற்கனவேபெற்ற கடன்களுக்கு செலுத்த வேண்டியிருப்பதாகப் பிரதி நிதிய மைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி மீதமுள்ள 35 பில்லியன் ரூபாய்களைக்கொண்டே அரசாங்க ஊழியர்களின்சம்பள உயர்வு உட்பட பல்வேறு அபிவி ருத்திக

(8ஆம் பக்கம் பார்க்க)

## வேலையற்ற பட்டதாரிகள் 6000பேருக்கு வேலைவாய்ப்பு

அரசாங்கம் வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகள் 6000 பேருக்கு வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுக்கும் துரித திட்டம் ஒன்றை வகுத்திருப்பதாக அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளமை இதற்காக வேலைவாய்ப்பற்ற பட்டதாரியின் விபரங்கள் திரட்டப்பட்டுள்ளதாகவும் அடுத்த வாரம் தொடக்கம் தேர்தல்

(8ஆம் பக்கம் பார்க்க)

## சு.கட்சியின் நிலைப்பாடு இன்று வெளிவரலாம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்காலத் தீர்வுத் திட்டம் தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, இன்று அதன் நிலைப்பாட்டை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தீர்வுத்திட்டம் தொடர்பில் நேற்று முன்தினம் சனாதிபதி எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச உட்பட அரசியல் அமைப்பு வல்லுனர்களுடன் கலந்தாலோசனை நடத்தியுள்ளனர். நேற்றும் அவ்வாறான கலந்தாலோசனை இடம்பெற்றுக்கொண்டிருந்தது. இதனடிப்படையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதன் நிலைப்பாட்டை இன்று வெளியிடவிருக்கிறது.

## – யாழ். இல் காணாமல் போனோர் குறித்த விசாரணைக்கு –

## கூட்டுப்படைத்தளபதி பலகல்லவை மேல்நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

(யாழ்ப்பாணம்)

கூட்டுப்படைத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல மற்றும் சட்டமா அதிபர் கமலசபேசன் ஆகியோரை எதிர்வரும் 25ஆம் திகதி மேல் நீதிமன்றில் ஆஜராகுமாறு மேல் நீதிமன்ற நீதவான் வரதராஜா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

1996, 97ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் கைதடிப் பகுதி சுற்றிவளைப்பின் போது படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோரான அ. கோடீஸ்வரன், பொ. ரவீந்திரன், பொ. சிவராசா, பொ. ஜெயரட்ணம், இ. சிவகுமார் ஆகிய ஐவர் தொடர்பாக அவர்களது உறவினர்களால் கடந்த 26ஆம் திகதி மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை குறித்தே நீதிபதி இவ்விருவரையும் நீதிமன்றிற்கு ஆஜராகுமாறு பணித்துள்ளார்.

இதேவேளை, ஏற்கனவே கடந்த 29ஆம் திகதி நடைபெற்ற

(8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் திட்டம் நன்கு ஆராயப்பட வேண்டியது

### - அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதி

தமிழீழ விடுதலைப்புலிகள் இடைக்கால நகல்த் திட்டம் பற்றி நன்கு ஆராயவேண்டியுள்ளதாகவும் ஆழமாக கலந்துரையாட வேண்டியுள்ளதாகவும் மல்வத்த அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரோக்கள் கூறியுள்ளனர். எந்த வேளையிலும் சமாதானத் திட்டத்தை நாங்கள் குழப்ப விரும்பவில்லை. எல்லோரும் இத் திட்டத்தைப் பற்றிக் கலந்தாலோசித்து முக்கிய விடயத்தில் கவனம் செலுத்தவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் தாமதம்

புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் மேலும் காலதாமதமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சனாதிபதியின் பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் சிரேஷ்ட தன்மை தொடர்பில் பிரதி சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர்கள் நான்கு பேரில் ஒருவரை பரிந்துரை செய்யும் பொறுப்பு அரசியலமைப்பு நிர்ணயசபைக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தது. நேற்று சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் கூடிய அரசியலமைப்பு சபை மீண்டும் பொலிஸ் மா அதிபர் நிலைக்கு ஒருவரை

(8ஆம் பக்கம் பார்க்க)

## புலித்தேவனை 4அமைச்சர்கள் சந்தித்ததாக ஊடகங்களில் வெளிவந்த செய்தி முற்றிலும் தவறு

### அரசியல்துறை நடுவப் பணியகம் அறிவிப்பு

சிறிலங்கா அரசின் நான்கு மூத்த அமைச்சர்கள் ஞாயிற்றுக்கிழமை வவுனியாவிற்குச் சென்று விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகச் செயலர் புலித்தேவன் அவர்களுடனும் ஏனைய பிரதிநிதிகளுடனும் இடைக்கால நிர்வாக வரைவுதொடர்பாக கலந்துரையாடியதாக ஊடகங்களில் வெளிவந்த செய்தி முற்றிலும் தவறானது என அரசியல்துறை நடுவப் பணியகம் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடைக்கால நிர்வாக வரைவு கடந்த 31-10-2003 அன்று கிளிநொச்சியில் வைத்து தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களால் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விண்ணப்பப்படிவம் அச்சிடல்

தேசிய சேமிப்பு வங்கிக்கான வங்கி உதவியாளர் பதவிக்கான விண்ணப்பப்படிவங்கள் ( சுயவி பரம்) அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள லாம். ICS கணினிப் பயிற்சி நிலை யம், இலங்கைவங்கிக்கு அண்மை யில் A9சாலை, கிளி நொச்சி.

(3150)


## 800 விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கல்

உணவு விவசாய ஸ்தாபனத்தின் நிதி உதவியுடன் பாண்டியன்குளம் துணுக்காய்ப் பிரதேசத்தில் 800 விவசாயிகளுக்கு 2003,2004 ஆண்டு காலபோக நெற்செய் கையை ஊக்கிவிக்கும் பொருட்டு நெல் மற்றும் உள்ளிடுகள் முதற் கட்டமாக வழங்கப்பட்டுள்ளது. என துணுக்காய் பொருண்மிய இணைப் பாளர் கு.சசிக்குமார் தெரிவித்துள் ளார். (24)

# குப்பிழானில் மக்கள் குடியமர்வு குறித்து யாழ். மனித உரிமைக்குழு ஆராய்வு

வலிகாமம் வடக்கின் குப்பிழான் பகுதியில் அங்கிருந்து இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமர படைத் தரப்பு தொடர்ந்தும் அனுமதி மறுத்து வருகின்றமை தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் குழு நேற்று அப்பகுதிக்கு நேரடி யாக விஜயம் செய்து ஆராய்ந் துள்ளது.

பலாலி படைத் தளத்தை உள்ளடக்கிய அதிஉயர் பாதுகாப்பு வலயப் பகுதியினுள் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர படைத் தரப்பு தொடர்ந்தும் அனுமதி மறுத்து வருகின்றது. இந்நிலையில், குறித்த அதி உயர் பாதுகாப்பு வலயப் பகு தியின் பாதுகாப்பு முன்னரங்கப் பகு தியில் இருந்து 600 மீற்றர் தூரப் பகுதியினுள்ளும் இடம்பெயர்ந்த அப்பகுதி மக்களை மீளக்குடியமர படைத்தரப்பு தொடர்ந்தும் அனுமதி மறுத்து வருகின்றது.

அத்துடன் குறித்த பகுதியினுள் விவசாய நடவடிக்கைகளை எவ ராவது மேற்கொண்டிருந்தால் இவ் வருட இறுதியுடன் அவற்றை கை விட்டுவிட வேண்டுமெனவும் நிர்ப் பந்தித்தும் வருகின்றது. இதனால், விவசாய பிரதேசங்களான கட்டுவன், குப்பிழான், புன்னாலைக்கட்டுவன் மற்றும் வசாவிளான் உள்ளிட்ட கிராமங்கள் சிலவற்றைச் சேர்ந்த மக்கள் பெரும் பாதிப்பிற்குள்ளா கியுள்ளனர்.

இந்நிலையில், குப்பிழான் பகுதியில் குறித்த 600 மீற்றர் தூர எல்லைப் பகுதிக்கப்பால் உள்ள தனதுவீட்டில்மீளக்குடியமரச் சென்ற பொதுமகன் ஒருவரை படையினர் திருப்பி அனுப்பியுள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட பொதுமகன் செய்த முறைப பாட்டையடுத்தே, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகள் குழுவொன்று நேரடியாக அப்பகுதிக்குச் சென்று நேற்று விசாரணைகளை மேற் கொண்டிருந்தது.

எனினும், அங்கு நிலை கொண் டுள்ள படை அதிகாரிகள் குறித்த வீட்டில் குடியிருக்க விண்ணப்பித்து யாழ். படைத் தலைமையின் அங்கீ காரத்தைப் பெற்றல் மட்டுமே குறித்த குடும்பத்தை மீளக் குடிய மர அனுமதிக்க முடியுமென அறி வித்துள்ளனர்.

அத்துடன் மீளக்குடியமரும் குடும்பம் தொடர்பாகக் குறித்த பகு தியை உள்ளடக்கியுள்ள வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் உரிய சிபார்சுகளை செய்தே படைத் தலைமைக்கு விண்ணப்பிக்க முடியு மெனவும் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே பன்னாலைப் பகு தியில் இக்குறித்த 600 மீற்றர் எல் லையினுள் உள்ள தனது காணி யினுள் அண்மையில் புதிதாகக் கட்டிய வீடொன்றை, தமது அனும தியின்றி கட்டியதாகத் தெரிவித்து உடைத்துவிடுமாறு அண்மையில் படைத் தரப்பு அறிவித்திருந்ததும், பின்னர் வெகுசன அமைப்புகள் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் எதிர்ப்புகளை யடுத்து அதனைக் கைவிட்டிருந் ததும் குறிப்பிடத்தக்கது.

# சிறிலங்கா கூட்டுப்படைத்தளபதி இவ்வாரம் இந்தியா விஜயம்

கூட்டுப்படைத்தளபதி லெப்டினட் ஜெனரல் லயனல் பலகல்ல உத்தி யோகபூர்வ விஜயமொன்றை மேற் கொண்டு இவ் வாரம் இந்தியா செல்லவுள்ளார்.கூட்டுப்படைத் தளபதியாக பதவியேற்றதன் பின் இந்தியா வுக்கு பயணம் மேற் கொள்ள இருப்பது இதுவே முதற் தடவையாகும்.

# கிளி. நகரில் கடந்தவாரம் முதல் பெற்றோலுக்கு பெரும் தட்டுப்பாடு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரத்தில் கடந்த வாரம் முதல் எரிபொருள், (பெற் றோல்)க்கு தட்டுப்பாடு நிலவிவரு கின்றது.

தற்போது கிளிநொச்சி நகரப் பகுதியில் அமைந்துள்ள எரி பொருள் விற்பனை நிலையமான கரைச்சிதெற்கு ப.நோ.கூ.சங்க எரி பொருள் விற்பனை நிலையத்தில் பெற்றோல் தீர்ந்துள்ளமையின் காரணமாக பெற்றோல் வாகன பாவ னையாளர்கள் பெரும் அசௌ கரியங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

இதேவேளை, தனியார் எரிபொருள் விற்பனை நிலையங்களி லும் பெற்றோல் தீர்ந்து விட்டதென கைவிரித்துவருகின்றனர்.

இதன்காரணமாக கிளிநொச்சி நகர பகுதிபெற்றோல் வாகன பாவனை யாளர்கள் பெற்றோலினை பெறும் பொருட்டு பல இடங்களுக்கு அலைந்து திரிவதனை அவதானிக்க முடிகி றது. (சோ)

## கமக்காரர் ஓய்வூதியத்தின் காலாவதியான அங்கத்துவத்தைப் புதுப்பித்தல்

வவுனியா,கிளிநொச்சி, முல் லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து பல்வேறு காரணங்க ளால் கட்டுப்பணங்களை ஒழுங்கு முறையில் செலுத்தத் தவறி அங் கத்துவத்தை இழந்த கமக்காரர் களுக்கு மீண்டும் ஒரு சந்தர்ப் பத்தை கமத்தொழில் மற்றும் கம நலக்காப்புறுதிச் சபை வழங் கியுள்ளது. இதற்கமைவாக 01.10.2003 தொடக்கம் 31.03 2004 ஆந் திகதிவரையான காலப்பகுதிக் குள் வவுனியா மாவட்டக்காரியால யத்திலோ அல்லது சபையின் வெளிக்கள உத்தியோகத்தர் களிடமோ தொடர்புகொண்டு நிலுவையானகட்டுப்பணங்களை தாமதக் கட்டணத்துடன் செலுத்தி அங்கத்துவத்தைப் புதுப்பிப்ப தன்மூலம் இத்திட்டத்தின் கீழான நலன்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதுசம்பந்தமாக கிளிநொச்சி மாவட்ட அங்கத்தவர்கள் ஒவ்வொரு புதன்கிழமைகளில் கிளிநொச்சி கமநலச் சேவை நிலையத்திலும் வவுனியா முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகள் நேரடியாக வவுனியா மாவட்டக் காரியாலயத்துடனும் தொடர்புகொண்டு அங்கத்வுதத் தைப் புதுப்பிக்க முடியும் என உதவிப்பணிப்பாளர் அறிவித்துள் ளார்.

## - கிளிநொச்சி, முல்லைத்தீவுமாவட்ட -
# பதிவு செய்யப்படாத ஊர்திகளுக்கு பதிவு எண் வழங்க நடவடிக்கை

கடந்த காலத்தில் யுத்த நெருக கடி காரணமாகப் பதிவு செய்யப்ப டாத சகல ஊர்திகளையும் கிளி நொச்சி மாவட்டத்தில் பதிவு செய்வ தற்கான அனுமதியை கொழும்பு மோட்டார்போக்குவரத்துத் திணைக் களம் பதிவு செய்து இலக்கங்கள் வழங்க அனுமதி வழங்கியுள்ளது. இதன் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருப் பினும், வாகன எண்களை இனங் காண முடியாத சகல ஊர்திகளுக் கும், புதிதாகக் கொள்வனவு செய்து வாகனப் பதிவு மேற்கொள்ளப்படாத சகல ஊர்திகளுக்குமான வாகனப் பதிவு மேற்கொள்ளப்பட்டு பதிவு எண்கள் வழங்கப்பட நடவடிக்கை கள் எடுக்கப்படுகின்றது. கடந்த கால வரிகள் எதுவும் செலுத்தப்பட வேண்டியதில்லை. சத்தியக்கடதாசி முடிக்கும் அத்திகதிக்குரிய வரி செலுத்தப்படுதல் வேண்டும்.

எனவே மேற்படி நிபந்தனைக ளுக்கமைய வாகனப் பதிவை மேற்கொள்ள விரும்புபவர்கள் கிளி அரச செயலகத்தில் உரிய படி வங்களைப்பெற்றுப்பதிவுகளை மேற் கொள்வதுடன் பின்வரும் ஆவணங் களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

01. ஆவணங்கள் தொலைந்த மையையும், வாகனம் பற்றிய விப ரங்களையும் உறுதிப்படுத்தும் கிராம அலுவலர் ஊடான பிரதேச செயலரின் கடிதம்

02. ஆவணங்கள் தொலைந்த மையையும், வாகனம் பற்றிய விப ரங்களையும் உறுதிப்படுத்தும் சமா தான நீதவானின் கடிதம்.

வாகன வகை, இயந்திர அடிச் சட்ட எண், வாகன நிறம், வாங்கிய நாள், வாங்கிய நிறுவனத்தின் பெயர் (தெரிந்திருப்பின்) ஆவணங்கள் தொலைந்த காரணம், இதுவரை பதிவு செய்யாமைக்கான காரணம் போன்றன குறிப்பிடப்படுவதுடன், இப்பதிவு சம்பந்தமான சட்ட நட வடிக்கையின் போது முழுப்பொறுப் பையும் பதிவு செய்பவரே ஏற்பார் என்பதை உறுதிப்படுத்துதல் வேண் டும்.

3.கிராம அலுவலரால் உறுதிப் படுத்திய இரண்டு கறுப்பு வெள் ளைப் புகைப்படங்கள்

4.கிராம அலுவலரால் உறுதிப் படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு (வலு வில்உள்ளது)அல்லது சாரதி அனும திப்பத்திரம் அல்லது தபால் அறி முகஅட்டை(வலுவில் உள்ளது)ஏதா வதொன்றின் தெளிவான பிரதியும் அதன் மூலப்பிரதியும்.

5.அத்துடன் உரிமையாளர் நேரில் வாகனத்துடன் சமுகமளிக்க வேண் டும்.இப்பதிவுகள் யாவும் பத்து நாட் களுக்குள் முடிவுறுத்தப்படும் வகை யில்5ஆம் திகதியிலிருந்து 15ஆம் திகதிவரை மட்டுமே மேற்கொள்ளப் படும் என்பதை கிளி.மாவட்ட அரச அதிபர் தி. இராசநாயகம் தெரிவித் துள்ளார். (சோ)

# துணுக்காய்ப் ப.நோ. கூ.ச. கிளைத் திறப்பு விழா

(மல்லாவி)

துணுக்காய் ப. நோ. கூ. சங்கக் கிளையின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று காலை 11.30 மணிக்கு மல்லாவி வள நகரில் கிளைக்குழுத் தலைவர் க. செல்வரத்தினம் தலை மையில் திறப்பு நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

புதிய ப. நோ. கூ. சங்கத்தின் ஸ்ரீமுருகன் கிளை 13இன் திறப்பு நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியினை துணுக்காய்ப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாள தி. தர்மேந்திரா அவர்களும், ப.நோ.கூ. ச. கொடியினை த.குகானந்தராஜ அவர்களும் ஏற்றினர்.

புதிதாக அமைக்கப்பட்ட கட்ட டத்தினை முல்லை மாவட்ட கூட்டு றவு அ.தி உதவி ஆணையாளர் சி. மூ.சிவமயம்அவர்கள் சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டித்திறந்து வைத்துள்ளார். (24)


## சேரன் வாணிபம்

## பணிநிலை வெற்றிடம்

01. பணிநிலை :- எழுதுநர் பயிலுநர் [ஆண்]

தகைமைகள்:- தமிழ்,கணிதம், வர்த்தகம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியுடன்,ஆறுபாடங்களில் சித்தி அடைந்திருத்தல்வேண்டும்.

அகவை :- 20 - 30 அகவை உடையவராக இருத்தல் வேண்டும்.

கொடுப்பனவு :- பயிற்சிக்காலத்தில்ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா2,000/=வழங்கப்படும்.

பயிற்சிக்காலம் :- மூன்று மாதங்கள்

02. பணிநிலை :- வெதுப்பக உற்பத்தியாளர் பயிலுநர் [ஆண்]

● புதிய தொழில்நுட்பப் பொறித்தொகுதிகளில் பயிற்சிகள் வழங்கப்படும்.

தகைமைகள்:- தமிழ் ,விஞ்ஞானம், கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தி அடைந்திருத்தல்வேண்டும்.

அகவை :- 20 -30 அகவை உடையவராக இருத்தல்வேண்டும்.

கொடுப்பனவு :- பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக ரூபா 2,000/= வழங்கப்படுவதுடன்,தங்குமிட வசதியும் ஒழுங்குசெய்யப்படும்.

பயிற்சிக்காலம் :- ஆறு மாதங்கள்.

வேண்டுகைகள் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட, தனி விளக்கங்கள் அடங்கிய படிவத்தில் பூர்த்தி செய்து 2003.11.12ஆம் நாள் புதன்கிழமைக்கு முன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு, தபாலிலோ அல்லது பணிமனை பணிநேரத்தில்நேரிலோ அனுப்பி வைக்கப் படல்வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் எழுதுநர் வெதுப்பக உற்பத்தியாளர் பயிலுநர் பணிநிலைக்கான விண்ணப்பப் படிவம் என எழுதப்பட வேண்டும்.

ஆளுகை,
சேரன் வாணிபம்,
நடுவப்பணிமனை,
யாழ்.வீதி,கிளிநொச்சி.

(சி-8694)



## இரண்டாம் ஆண்டு நீங்காத நினைவுகளுடன்...

மலர்வு
01
06
1982





உதிர்வு
04
11
2001

(சிவநாதன் சர்வலோஜினி')

துள்ளிவரும் சிரிக்குஞ்சே
நாளெல்லாம் உன் நினைவு
நாவெல்லாம் உன் பேச்சு
தேனாக இனித்தகுரல் தேயுமென்று
யார் கண்டார்.

த.மு:- பாஸ்கரன்,
7ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு. (3149)

## லெப். தென்றல்

மாறாத உன் நினைவால் - வாழ்வு
வீணாகப் போகுதேயம்மா
ஆண்டுகள் இரண்டு பறந்தோடிப் போனாலும்
நினைவழியா உன் நினைவுகளுடன்.

அம்மா, தம்பிமார், தங்கை, அம்மம்மா,
மாமாமார்கள், மாமிமார்கள்,
சித்தப்பாமார்கள், சித்திமார்கள்

# அமெரிக்கரிடையே பிளவை அதிகரிக்க ஈராக் தாக்குதல் வழியமைத்துள்ளது!

**-பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட் விசனம்**

**(வாஷிங்டன்)**

**"ஈராக் மீதான யுத்தம் சரியானது தானா என்பதில் அமெரிக்கர்கள் பிளவுபட்டுள்ளார்கள். இந்தப் பிளவை அதிகரிக்கும் வகையிலே நேற்று முன்தினம்உலங்குவானூர்திமீதான தாக்குதல் அமைந்துள்ளது". இவ்வாறு அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ர ்ஸ்பீல்ட் கூறியுள்ளார்.**

ஈராக்கிய மண்ணில் நிலை கொண்டிருக்கும் அமெரிக்கத் துருப்புக்களைப் பொறுத்தவரை நேற்று முன்தினம் மிகவும் துக்ககரமான நாளாகும்.

பாக்தாத்தில் அமெரிக்க உலங்குவானூர்தி ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டதில் 15 பேர் கொல்லப்பட்டனர். இச் சம்பவம் தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கப்பட வேண்டிய அவசியம் இத்தாக்குதல் மூலம் மேலும் வலியுறுத்தப்படுவதாக அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

ஈராக் மீதான யுத்தம் சரியானது தானா என்பதில் அமெரிக்கர்கள் பிளவுபட்டுள்ளார்கள். இந்தப் பிளவை அதிகரிக்கும் வகையிலே நேற்று முன்தினத் தாக்குதல் காணப்படுகின்றது.

எனினும் நாட்டு மக்களைப் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என அமைச்சர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஈராக்கில் நீண்ட கடுமையான போர் காத்திருக்கின்றது. சங்கடமான நாட்கள் இன்னும் ஓயவில்லை.

அதேநேரம் இச் சம்பவத்தினால் நாம் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளதோடு உலகளாவிய பயங்கரவாத ஒழிப்புப் போரில் வெற்றி கிட்டும் வரை அமெரிக்கா சோர்ந்துவிடாது தொடர்ந்து போராடும்.

இந்தச் சம்பவம் ஒரு தேசிய இழப்பு.அமெரிக்கத் துருப்புக்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டாலும் இதனால் அமெரிக்கா ஒருபோதும் மனம் தளராது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் ஈராக்கில் ஊடுருவிய அமெரிக்கப் படைகள் மீது நடாத்தப்பட்ட மிக மோசமான தாக்குதலாக நேற்று முன்தினத் தாக்குதல் அமைந்துள்ளது.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையுடன்,ஈராக்கின் போருக்குப் பின்னராகக் கொல்லப்பட்ட அமெரிக்கர்களின் எண்ணிக்கை 140 ஆகக் கூடியுள்ளது.





அமெரிக்காவின் இரு பிளக் ஹவாக் ரக இராணுவ உலங்கு வானூர்திகள் பலூஜா அருகே சினோக் ரக உலங்கு வானூர்தி சுட்டு விழ்த்தப்பட்ட இடத்தில் தரையிறங்க தயாராவதையும் இப் பகுதியில் தேடுதல் நடத்தும் உலங்கு வானூர்தியைப் பார்க்கும் ஈராக்கியர்களையும் படங்களில் காண்க.

## விரிவாக்க விவாதம்!

ஆப்கானிஸ்தானிலுள்ள பன்னாட்டுப் படைகளை விரிவுபடுத்துவது குறித்து, ஆப்கானிஸ்தான் சனாதிபதி ஹமித் ஹச்சாயுடன் ஐ.நா.சபைக்குழு விவாதிக்கவுள்ளது. ஆப்கான் மக்கள் பற்றிய அக்கறை சர்வ தேச அலுவல் பட்டியலில் உயரிடம் பெற்றுள்ளது என்பதை அவர்களிடம் விளக்குவதற்காகவே ஐ.நா. சபைக்குழு ஆப்கானிஸ்தான் சென்றுள்ளது.

# நூற்றுக் கணக்கான இளைஞர்கள் ஈராக் நோக்கிப் படையெடுப்பு

அல்-ஹைதா மற்றும் இதர தீவிரவாத அமைப்புக்களில் சேர்வதற்காக ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வசித்து வரும் நூற்றுக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் ஈராக்கிற்குப் படையெடுத்து வருகின்றனர்.

6 நாடுகள் உளவுத்துறை அதிகாரிகளை மேற்கோள் காட்டி 'நியூயோர்க் டைம்ஸ்' நாளேடு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

நூற்றுக் கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் சிரியா மற்றும் ஈரான் வழியாக ஈராக்கிற்குள் நுழைந்து விட்டனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அமெரிக்க ஒப்பந்தக்காரர் இருவர் ஈராக்கில் மரணம்!

ஈராக்கின் பலூஜா நகரில் நேற்று முன்தினம் நடந்த குண்டுத் தாக்குதலில் 02 கட்டட ஒப்பந்தக்காரர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இந்த வீதியோரத் தாக்குதலில் இறந்தவர்கள் அமெரிக்க கட்டட ஒப்பந்தக்காரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேநேரம் குண்டுத்தாக்குதலை அடுத்து, வாகனச் சிதைவுகளுக்கு அருகில் ஈராக்கியர்கள் ஆடிப்பாடி மகிழ்ந்துள்ளார்கள் என்றும் கூறப்படுகின்றது.

# இஸ்ரேல் மீது தாக்குதல்களை நிறுத்திவிட கமாஸ் மறுப்பு

பலஸ்தீனர்களால் 03 வருடகாலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் புரட்சிகரமான இராணுவப் போராட்டத்தை கைவிடப் போவதில்லை, என்றும் இஸ்ரேல் மீது தற்கொலைத் தாக்குதல்கள், வன் செயல்களையும் நிறுத்தப் போவதில்லை என்று இஸ்லாமிய கமாஸ் இயக்கத் தலைவர் அப்துல் அஜித் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் இஸ்ரேல் படையினர் மீதும் யூதக் குடியேற்றங்கள் மீதும் தாக்குதல்களை நடத்த எவ்வேளைகளிலும் தயாராக இருப்பதாகவும் அவ்வமைப்புக் கூறியுள்ளது.

இதனால் பலஸ்தீனப் பிரதமர் அகமத் குரேயும் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோனும் அறிவித்துள்ள மத்திய கிழக்குச் சமாதான முயற்சிகளில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேல் மீது மேற்கொள்ளப்படும் சகல தற்கொலை தாக்குதல்களும் பலஸ்தீன அதிகார சபையினால் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும் இஸ்ரேல் கோரிக்கை விடுத்துள்ளது.

# எல்லையில் பாகிஸ்தான் பீரங்கித் தாக்குதல்!

(புதுடில்லி)

காஷ்மீரின் கஜோரி மாவட்டத்தில் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டிற்கு அருகில் தினமும் பாகிஸ்தானின் பீரங்கித் தாக்குதல் தொடர்கிறது. நேற்று முன்தினத் தாக்குதலில் பொது மக்களில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

ஜம்முகாஷ்மீர் அருகே சர்வதேச எல்லை அருகில் இந்தியா எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கும், பாகிஸ்தான் படையினருக்குமிடையே துப்பாக்கிச் சண்டையும் நிகழ்ந்ததாகவும் இராணுவ வட்டாரம் கூறியுள்ளது.

# பலஸ்தீனருக்கு விதிக்கப்பட்ட பயணத்தடை ஆபத்தை விளைவிக்கலாமென அச்சம்

**தடை தளர்த்த இஸ்ரேல் ஏற்பாடு**

இஸ்ரேல் அரசு பயணத் தடைகளை நீக்கியதனையடுத்து ஆயிரக்கணக்கான பலஸ்தீனர்கள் வேலை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்குக்கரை மற்றும் காஸா பள்ளத்தாக்கில் பலஸ்தீனர்களுக்குப் பயணத்தடை விதிக்கப்பட்டிருந்தது. ஹுபா எனும் நகரில் பலஸ்தீனத் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்தது.

இத்தகைய தடைகளைப் பலஸ்தீன கிளர்ச்சியாளர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடும் என்ற நம்பிக்கை வளர்ந்து வருவதாக இஸ்ரேல் அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட தடை நீக்கம் காரணமாக பல குடும்பங்கள் பயன் பெற்றுள்ளன.



இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் இந்து – முஸ்லிம் சிறுவர்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி மோதலில் முடிந்தது. இதனால் ஏற்பட்ட தீ வைப்புச் சம்பவம் ஒன்றைக் கட்டுப்படுத்தும் தீயணைப்பு படையினர்.

# மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர் தாக்குதல் நேபாளத்தில் பத்து அரச படையினர் பலி!

(காத்மண்டு)

நேபாளத்தில் மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்கள் மேற்கொண்ட தாக்குதலில் படையினர் 10 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். 06 படையினர் காயமடைந்துள்ளார்கள்.



பிலிப்பைன்சின் மணிலா நகரில் சனிக்கிழமை மினிபஸ் ஒன்று 100 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் சாரதி உட்பட 9 பேர் பலியாகினர். இச்சம்பவத்தையே படத்தில் காண்க.

தலைநகர் காத்மண்டுவிலிருந்து சுமார் 200 கிலோ மீற்றர் வடக்கேயுள்ள பகுதியில் படையினர் நேற்று முந்தினம் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். இதன் போது கிளர்ச்சியாளர்கள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியுள்ளனர் என பாதுகாப்பு அதிகாரி கூறியுள்ளார்.


மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் நேபாள அரசுடன் சமாதானப் பேச்சுக்களை முறித்துக் கொண்டுள்ளனர் என்பது தெரிந்ததே.

இதனையடுத்து நாட்டின் பிரதான வர்த்தக கைத்தொழில் மையமாகக் கருதப்படுகின்ற நெறா என அழைக்கப்படும் பிராந்தியத்தில் இராணுவ அரசாங்க நிலைகள் மீது கூடுதலாகத் தாக்குதல்களை நடத்தி வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# இங்கிலாந்து-சிறிலங்கா கிரிக்கெட் தொடர் பரபரப்பை ஏற்படுத்துமா?

கடந்த 5மாத கால ஓய்வுக்குப் பின்னர் இன்னும் இருவாரங்களில் சிறிலங்கா அணி போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளது. அந்த வகையில் அது எதிர்கொள்ளவுள்ள அணி இங்கிலாந்து கிரிக்கெட் அணியை.

இந்த இரு அணிகளிடையேயும் நடைபெறவுள்ள டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகள் பரபரப்பாக இருக்கும் என்பதில் ஐய



மில்லை. காரணம் தமது முன்னைய அணித் தலைவர்களையும் அணியிலும் மாற்றத்தை ஏற்படுத்தி பெரும் எதிர்பார்ப்புடன் களமிறங்கும் போட்டிகளாகவுள்ளது.

சிறிலங்கா அணியைப் பொறுத்தளவில் அதன் அணி இரு தலைவர்களைக் கொண்டிருக்கிறது. அதாவது-டெஸ்ட் போட்டிகளுக்கு ஒரு தலைமையும் ஒருநாள் போட்டிகளுக்கு ஒரு தலைமையும் பொறுப்பேற்றுள்ளன. இதுவரை நடைபெற்ற போட்டிகளில் ஒருநாள் போட்டிகளிலும் டெஸ்ட் போட்டிகளிலும் அணியைச் சிறப்பாக வழிநடத்தி பல வெற்றிகளைப் பெற்றுத் தந்த சனத் ஜெயசூரிய இவ்வருட முற்பகுதியில் சாஜா கிண்ணத்துக்காக நடந்த போட்டியில் பாகிஸ்தானிடம் தோல்வி கண்டதையடுத்து அணித் தலைவர் பதவியில் இருந்து தானாக விலகிக்கொண்டார். அதன் பிறகே அணிக் குத் தலைமை தாங்கும் பொறுப்பு இருவரிடம் வழங்கப்பட்டது.

தலைமைப்பொறுப்பில் குறைகாணப்படினும் அணி வீரர்கள் சராசரியாக சிறப்பாகவே செயற்படுகின்றனர். துடுப்பாட்டத்தில் சனத் ஜெயசூரிய, மகேல ஜயவர்த்தன, மாவன் அத்தபத்து போன்றோரின் துடுப்பாட்டம் அவ்வணிக்கு சிறப்பாக பங்களித்துள்ளன. அதேபோன்று பந்து வீச்சிலும் உலகின் தலைசிறந்த பந்துவீச்சாளராக கருதப்படும் முரளிதரன் மற்றும் சமிந்த வாஸ், தில்ஹார பெர்னாண்டோ ஜயசூரிய ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள். எவ்வாறெனினும் அண்மைக்காலங்களில் நடைபெற்ற போட்டிகளில் அணியின் ஆட்டம் குறிப்பிடத் தக்க அளவில் இருக்கவில்லை என்பது உண்மை.

சிறிலங்கா அணியைப் போன்றே இங்கிலாந்து அணியும் தலைவர் பதவியுள்ளிட்ட அணியில் பல மாற்றங்களைச் செய்துள்ளது. அது அண்மையில் பங்கு பற்றிய சில போட்டிகளில் வெற்றியும் கண்டுள்ளது. கடந்த காலங்களில் அது சந்தித்த போட்டிகள் பத்தில் ஏழு போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளது. கடந்த வருடமும் சிறிலங்காவுக்கு விஜயம் மேற்கொண்டு பங்குபற்றிய மூன்று டெஸ்ட் போட்டிகளில் இரண்டில் வென்றுள்ளது. அப்போது சிறிலங்காவின் அணித் தலைவராக ஜயசூரியவும் இங்கிலாந்து அணித்தலைவராக நாசர் ஹுசைனும் இருந்தனர். சில போட்டிகளில் தோல்வியைச் சந்தித்ததால் தற்போது இங்கிலாந்து அணியின் அணித்தலைவராக மைக்கல் வோகன் நியமிக்கப்பட்டு அணி புதுத்தெம்புடன் காணப்படுகின்றது. அவ்வணியிலும் குறிப்பிடத்தக்க வகையில் ஆடக் கூடிய துடுப்பாட்ட வீரர்களும் பந்து வீச்சாளர்களும் காணப்படுகின்றனர். எனினும் பங்களாதேஷ் டெஸ்ட் தொடரை கைப்பற்றிய பின் சிறிலங்கா அணியுடன் மோதுவதைப் பெரும் சவாலாகக் கருதி தமது அணிக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். தற்போதைய அணித் தலைவர் வோகன் சிறிலங்காவுடனான கிரிக்கெட் வரலாற்றை நோக்கும்போது டெஸ்ட் போட்டியிலும் ஒரு நாள் போட்டிகளிலும் இங்கிலாந்து அணிகளின் கரமே ஓங்கியிருக்கின்றது. ஆயினும் சிறிலங்கா அணியின் பந்து வீச்சின் சிறப்பைக் கருதியோ அல்லது அந்தப் பந்து வீச்சுக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்பதைத் தீர்மானிக்கும் நோக்கிலோ முரளிதரன் இங்கிலாந்தின் கவுண்டி போட்டிகளுக்கு அழைக்கப்பட்டிருந்தார். முரளிதரனும் தாம் பங்குகொண்ட கவுண்டி அணிகளுக்கு வெற்றியையும் பெற்றுக் கொடுத்துள்ளார்.

**—வடிவேல்—**

கடந்த வருடம் நட்வெஸ்ட் கிண்ண முக்கோணப் போட்டிகளில் கலந்துகொண்ட இங்கிலாந்து, இந்தியா, சிறிலங்கா அணிக



ளுக்கிடையிலான போட்டியிலும் இங்கிலாந்து அணி சிறிலங்காவை மடக்கி இந்தியாவுடன் இறுதியாட்டத்தில் மோதியது. அதன் சிறப்பான துடுப்பாட்டத்தால் இந்திய அணிக்கு 325 என்ற வெற்றி இலக்கை நிர்ணயித்தது.

ஆகவே சொந்த மண்ணிலேயே இங்கிலாந்து அணியுடன் பல தோல்விகளைச் சந்தித்த சிறிலங்கா அணி நடக்கவிருக்கும் போட்டியில் பழிவாங்கும் திட்டத்துடன் எதிர்பார்த்திருக்கிறது என்றால் மிகையில்லை. அத்தோடு முரளி, வாஸ் ஆகியோரின் பந்து வீச்சும் ஜெயசூரிய, அத்தபத்து மகேல ஆகியோரின் துடுப்பாட்டமும் அதனை நிறைவேற்றுமா என்பதும் புதிய தலைவர் ஹசான் திலகரட்ணவின் வழிநடத்தலும் எவ்வாறிருக்கும் என்பதும் பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

## வாரம் ஒரு நட்சத்திரம்...

### டியகோ மரடோனா- ஆர்ஜன்டீனா



அதிக பிரச்சினைக்குரிய அதேநேரம் மிகமிகத் திறமை வாய்ந்த ஒரு உதைபந்தாட்ட வீரராகத் திகழ்ந்தவர் மரடோனா. 1978 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் 17 வயதான மரடோனா கலந்து கொள்ள மயிரிழையில் தவறவிட்டாலும், 1982 இல் பிரேசிலுக்கு எதிரான போட்டியில் கலந்து கொண்டார்.

உலகின் அதிக ஊதியம் பெறும் உதைபந்தாட்ட வீரராக 3 கோடியில் இருந்து 5 கோடி பவுண்ட்ஸ் பெற்று, உலகக் கிண்ணத்தில் அவரின் உச்ச சாதனைக்குப் பின்னர் பார்சிலோனா (ஸ்பெயின்) ஊடாக நப்போலி (இத்தாலி) க்கு மாற்றப்பட்டவர். அவர் ஆர்ஜன்டீனா அணியின் கப்டனாக மட்டுமல்ல இங்கிலாந்துடனான ஆட்டத்தில் இரண்டு கோல்களை போட்டார்.

முதலாவது கோலை கையால் போட்டியிருந்தாலும் இரண்டு நிமிடங்களில் மைதானத்தின் மையப் பகுதியிலிருந்து தனியாக இங்கிலாந்து வீரர்களின் எதிர்ப்பையும் முறியடித்து மிகவும் சிறப்பாக அந்த இரண்டாவது கோலைப் போட்டார். 1990 இல் மரடோனாவுக்கு ஏற்பட்ட காயத்தால் ஆர்ஜன்டீனா அணி இரண்டாவது ஸ்தானத்துக்குத் தள்ளப்பட்டது. ஆனால் 1994 ல் மனவேதனைக்குரிய வகையில் ஒரு போதைவஸ்து பரிசோதனையில் அவர் அணியில் இருந்து பரிதாபமாக அப்புறப் படுத்தப்பட்டார்.

ஜெயந்திரன்




# மழையால் உதயமான ஒரு நாள் போட்டி

பல மணிநேரம் மழையால் கிரிக்கெட் போட்டி நின்று போகிறது. ஆனால் ஒருநாள் கிரிக்கெட் போட்டி மழையால் தான் உதயமானது என்ற உண்மை பலருக்குத் தெரியாது.

இங்கிலாந்து அணி 1970-1971 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்து டெஸ்ட் போட்டிகளில் ஆடியது.

மூன்றாவது டெஸ்ட் போட்டி மெல் போர்ன் நகரில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் மழை காரணமாக போட்டியை நடாத்த முடியவில்லை.

ஏமாற்றமடைந்த ஆயிரக்கணக்கான ரசிகர்களை திருப்திப்படுத்த சனவரி 5ஆம் திகதி இரு அணிகளும் ஒருநாள் போட்டியில் மோதின. அந்த ஆட்டம் அமோக வரவேற்பைப் பெற்றது. போட்டியை 46 ஆயிரம் பேர் கண்டுகளித்தனர். தலா 40 ஓவர்கள் பந்து வீசப்பட்ட அப் போட்டியில் 5 விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது. ஆனால் இதற்கு முன்பே ஒருநாள் ஆட்டம் பற்றிய கருத்து தொடங்கிவிட்டது.

ஐந்து நாள் (2இனிங்ஸ்) ஆடும் டெஸ்ட் ஆட்டம் அலுப்புத் தட்டவே 1960 ஆம் ஆண்டு குறிப்பிட்ட ஓவர்கள் பந்து வீசும் ஆட்டம் இங்கிலாந்தில் பிரபல்யம் அடையத் தொடங்கியது. இதன் தொடர்ச்சியாக 1963 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் ஜில்லெட் கிண்ணத்துக்கான போட்டியும் அப்படியே நடத்தப்பட்டது.

அவ் ஆட்டம் அப்போது அனைவரையும் கவர்ந்ததால் அந்த ஆட்டத்தின் முடிவைக்காண அறிய ரசிகர்கள் துடித்தனர். இதனால் பி.பி.சி. தனது ஒன்பது மணி செய்தியை சற்றுத் தாமதித்து தொடங்கியது. அந்த அளவுக்கு அப் போட்டி ரசிகர்களிடம் வரவேற்பைப் பெற்றது.

இப்படியாக ஒரு நாள் போட்டிக்கு ஏற்பட்ட மவுசைத் தொடர்ந்து 1972 ஆம் ஆண்டு நடந்த ஆஷஸ் தொடரில் ஆறாவது டெஸ்ட் போட்டிக்குப் பதிலாக மூன்று ஒருநாள் போட்டிகள் சேர்க்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து ஒரு நாள் போட்டிகள் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் பிரபல்யம் அடையத் தொடங்கியது.

# மதிப்பிட முடியாதவர்கள்

இந்தியாவில் நடைபெற்றுவரும் மும்முனை கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டியில் தோல்வி கண்ட அவுஸ்திரேலிய அணி தான் சந்தித்த இரண்டாவது மூன்றாவது போட்டிகளில் அபார வெற்றிகளைப் பெற்று தனது பலத்தை நிரூபித்துள்ளது. இதன்மூலம் கிரிக்கெட் உலகில் முடிசூடா மன்னர்களாக அவுஸ்திரேலியா அணி திகழ முக்கிய பங்காற்றி வருபவர்கள் அணியின் வேகப்பந்து வீச்சாளர்களான பிரட்லி, மெக்ராத்,கிலெஸ்பி என்ற கிரிக்கெட் உலகின் அபிப் பிராயத்தை அவுஸ்திரேலிய அணி தவிடுபொடியாக்கியுள்ளது.

அத்துடன் தனி நபரை நம்பி எங்கள் அணியில்லை



எவர் வந்தாலும் வராவிட்டாலும் நாங்கள் வெற்றி பெறுவோம். நாம் இந்தியா வந்தது வெற்றிக் கிண்ணத்தை சுவீகரிக்கவே என்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் றிக்கி பொண்டிங்கின் கூற்றுக்கு வலுச் சேர்த்துள்ளது.

குவாலியூரில் நடைபெற்ற தொடரின் முதலாவது போட்டியில் இந்திய அணி அவுஸ்திரேலிய அணியை 37 ஓட்டங்களால் தோற்கடித்து வெல்லமுடியாத அணி என்ற அவுஸ்திரேலியாவின் பெருமைக்கு சவால் விடுத்த போது கிரிக்கெட் அவதானிகளின் பார்வையும், கருத்துக்களும் அவுஸ்திரேலிய அணியில் இடம் பெறாது போன பந்துவீச்சாளர்களைப் பற்றியதாக இருந்தது.

இந்நிலையில் நியூசிலாந்து அணியை மோசமான தோல்விக்குள்ளாக்கிய அவுஸ்திரேலிய அணி கடந்த சனியன்று பெங்களூரில் நடைபெற்ற மேற்படி தொடரின் லீக் ஆட்டம் ஒன்றில் இந்திய அணியை மோசமான தோல்விக்குள்ளாக்கி அதன் சொந்த மண்ணில் பழிக்குப்பழி வாங்கியுள்ளது.

இந்திய ஆடுகளங்களில் திறமையாகப் பந்துவீசவும்,துடுப்பெடுத்தாடவும் கற்றுக்கொண்டுள்ள அவுஸ்திரேலியர் தமது திறமையில் குறைந்தவர்கள் என மதிப்பிடுவது தவறானதொன்றாகவே இருக்கும்.

எனவே இம் முக்கோணத் தொடரின் ஆரம்பத்தில் தோல்வியைச் சந்தித்து அவுஸ்திரேலியா அதிர்ச்சி அடைந்திருந்தாலும் அடுத்தடுத்த போட்டிகளில் அபார வெற்றிகளைப் பெற்று தொடரில் முன்னணி வகிக்கின்றது.

இந்நிலையில் இந்தியா வந்துள்ள அவுஸ்திரேலிய அணியின் பந்து வீச்சில் பலம் குன்றியிருந்தாலும் அதனைக் குறைத்து மதிப்பிட முடியாத நிலையே உள்ளது.

இது அவுஸ்திரேலிய அணி இறுதிப்போட்டியில் விளையாடும் வாய்ப்பைப் பெற்று கிண்ணத்தைச் சுவீகரிக்கும் அளவுக்குச் சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# நிறைவேற்று அதிகாரமா? பாராளுமன்றமா? பட்டிமன்றம் உயர்நீதிமன்றம் சென்றும் சிக்கலுக்கு மேல் சிக்கல்


ஜே..ஆர்

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமார துங்க பாதுகாப்பு அமைச்சுத் தொடர்பாகத் தனக்குள்ள அதிகாரங்கள் குறித்து உறுதிப்படுத்திக்கொள்ள உயர்நீதி மன்றத்திற்குச் சென்றிருக்கிறார். பாதுகாப்பு அமைச்சு முப்படைத் தளபதிகள். அதிகாரி களுக்கு சேவை நீடிப்புகள்,பதவி உயர்வுகள் வழங்குவதில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக எழுந்த நிலை அவரை உயர் நீதிமன்ற த்திற்குச் செல்ல வைத்திருக்கிறது.

கடற்படைத் தளபதிக்குச் சந்திரிகா வழங் கிய மூன்று வருடகாலப் பதவி நீடிப்பு,கடந்த ஆண்டு இராணுவத் தளபதிக்கு லொகான் குணவர்த்தனவின் பெயரைப் பாதுகாப்பு அமைச்சர் சிபாரிசு செய்த வேளை சனாதிபதி சந்திரிகா லயனல்பலகல்லவின் பதவிக் காலத்தை நீடித்திருந்தமை. இந்நிலையில்


காமினி திசநாயக்கா

ஓய்வுபெறவேண்டிய கட்டாய நிலையில் இருந்த லொகான்குணவர்த்தனவின் பதவிக் காலத்தை நீடிக்கப் பாதுகாப்பு அமைச்சர் விடுத்த வர்த்தமானி அறிவித்தல் இந்த ஆண்டும் பலகல்லவிற்குப் பதவி நீடிப்பு வழங்கப்பட்டமையை அடுத்துப் பாதுகாப்பு அமைச்சர் முப்படை உயர் அதிகாரிகளின் சேவைக்காலத்தை நீடிக்கக்கூடிய வகையில் விடுத்த வர்த்தமானி அறிவித்தல். இந்த இரு வர்த்தமானி அறிவித்தல்கள் தொடர்பாகச் சனாதிபதி கொண்ட எரிச்சல். இதன் தொட ராகவே உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சந்திரிகா கோரியுள்ளார்.

சனாதிபதியும் பாராளுமன்ற அங்கத்த வர்களும் முரண்படாதவகையில் சிறிலங்கா வின் தற்போதைய அரசியலமைப்பு மிகவும் சுமுகமான நிலையிலேயே காணப்படுகின்றது. அதாவது பாராளுமன்றமும் நிறைவேற்று அதிகாரமும் தத்தமது அதிகாரங்களை முழு அளவில் பயன்படுத்திக்கொள்ளக் கூடிய வகையில் உள்ளது.

இந்த அரசியல் அமைப்பை உருவாக்கிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன, 1966 ஆம் ஆண்டில் தான் அமைச்சராக இருந்த வேளை ஐ.தே.கவிற்கு இவ்வாறான ஓர் அரசியல மைப்புப் பற்றித் தெரிவித்ததாகவும், ஆனால் அன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்கவும் ஐ.தே.க உறுப்பினர்களும் எதிர்த்ததன் காரணமாக அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் போனதாகவும் தெரிவித்துள்ளார். பின்னர் 1972 ல் குடியரசு அரசியல் யாப்பை உருவாக்க அன்றைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க முயன்ற போது, அதன் போதும் தான் நிறைவேற்று அதிகார அரசியல் முறையைச் சிபாரிசு செய்ததாகவும். ஆனால், சிறிமாவோ பண்டாரநாயக்க அதனை ஏற்கவில்லை எனவும் தெரிவித்தார்.


பிரேமதாச

இறுதியில் 1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சி ஐந்தில் நான்கு பெரும் பான்மையுடன் தெரிவு செய்யப்பட்ட போது நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையை ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் உருவாக்க முடிந்தது.

இந்த அரசியலமைப்பின் ஆலோசகர்களில் ஒருவர் எனக் கருதப்படும் பேராசிரியர் ஏ.ஜே.வில்சன் தனது இறுதிக் காலத்தில் இந்த அரசியல் யாப்புப்பற்றிக் குறிப்பிடுகை யில் இந்த யாப்பு நிறைவேற்றப்படுவதற்கு இரண்டொரு தினங்களுக்கு முன்னரே தன்னி டம் இந்த யாப்பின் நகல் தரப்பட்டதாகவும் அதில் பல முரண்பாடுகள் காணப்பட்டதாகவும் அதனை நீக்கிச் செப்பம் செய்ய முயன்றது மட்டுமே தனது பணியாக இருந்ததாகவும் தெரிவித்தார்.

தான் யாப்பு நகலைப் படித்துப் பார்த்த போது அதில் ஒரு சரத்து வழங்கும் அதிகா ரத்தை மறு சரத்துப் பறிக்கும் வகையில் அமைந்திருந்ததாகவும் இயன்றளவு அந்நிலையை நீக்கிச் சீர்செய்து தான் வழங்கியதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

எனவே இந்த அரசியலமைப்பை உருவாக் கிய ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அதில் நிறை வேற்று அதிகாரத்துக்கும் சரி, பாராளுமன்றத் திற்கும் சரி பெரும் தொல்லைகள்-சிக்கல் களைக் கொடுக்கும் வகையிலேயே தயாரித் திருப்பது புலனாகின்றது. அது இப்பொழுது வெளிப்படவும் செய்கின்றது.

அரசியல் யாப்பை உருவாக்கிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன தனது முதலாவது பதவிக் காலத்தில் நெருக்கடி எதனையும் எதிர்கொள்ளவில்லை. ஆனால் இரண்டாவது பதவிக் காலத்தில்,அவர் ஆளும் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரிடமும் திகதியிடப்படாத பதவி விலகல் கடிதத்தைப் பெற்று வைத்துக்கொண்டிருந்தார். இது பாரா ளுமன்றம் குறித்த அவரது சந்தேகத்தைப் புலப்படுத்தியது.

தனது இரண்டாவது பதவிக் காலம் முடிய மீண்டும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நோக்கம் அவருக்கிருந்தது. அல்லது அப்போது பிரதமராக இருந்த ஆர்.பிரேமதா சவை சனாதிபதி வேட்பாளராக நியமிக்காது அத்துலத் முதலி அல்லது காமினி திசாநாயக் கவை சனாதிபதி வேட்பாளராக நியமிக்க ஜே.ஆர்.ஜெயவர்த்தன முயன்றார். அப் பொழுது அந்த முயற்சியைப் பிரேமதாச அரசி யலமைப்பு ரீதியாக அல்லாது தனது பாணி யினூடாக முறியடித்திருந்தார்.

இந்த அரசியலமைப்பில் நிறைவேற்று அதிகாரத்திற்கும் பாராளுமன்றத்திற்கு மிடையே அதிகாரப் போட்டி நிலவுமாயின் என்ன நிகழுமென்பது 1991 இல் பிரேமதாச சனாதிபதியாகப் பதவி வகித்த போது முதன்முறையாக வாய்ப்புப் பார்க்கப்பட்டது.

1991 ஆகஸ்ட் மாதத்தில் லலித் அத்துலத்முதலி,காமினிதிசாநாயக்க ஆகியோர் தலைமையிலான ஒரு ஐக்கிய தேசியக்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு 123 பா.உ.களின் கையொப்பங்களுடன் சனாதி பதி பிரேமதாசா மீது குற்றவியற் பிரேரணை ஒன்றைப் பாராளுமன்றச் சபாநாய கரிடம் சமர்ப்பித்தது. இதிலே எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் ஐக்கியதேசியக் கட்சி யைச் சேர்ந்த 45 உறுப்பினர்கள் கையொப் பமிட்டிருந்தனர். இது பாராளுமன்றம் சனாதிப திக்கு எதிராக திரும்பியிருந்ததையே காட் டியது.

இவ்வாறான ஒரு பிரேரணை சமர்ப் பிக்கப்பட்ட விடயத்தை மூன்று தினங்கள் சபாநாயகர் சனாதிபதிக்கு அறிவிக்காத நிலையில், எதிர்க்கட்சி உறுப் பினர் ஒருவரின் இரகசியத் தகவல் மூலம் அறிந்துகொண்ட பிரேமதாச பாராளுமன்ற அமர்வு களை உடனடியாக நிறுத்தி வைத்துவிட்டு அடுத்த கட்ட நடவடிக்கையில் இறங்கினார்.

123 பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்துடனான மனுவைச் செயற் படுத்தும் அதிகாரம் அப்பொழுது சபாநாயகர் எம்.எச்.முகமட்டிற்கு இருந்தது. இவரின் தூண்டுதலின் பெயரில் தான் இவ்வாறான மனு கொண்டுவரப்பட்டதாகப் பிரேமதாசா சந்தேகம் கொண்டார். இந்நிலையில் ஐக்கிய தேசியக்கட்சியில் வெளிப்படையாகவே எதிர் த்த பாராளுமன்ற உறுப்பினர்களை விடுத்து 116 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பாராளு மன்றம் சென்ற பிரேமதாச தன் மீதான பிரேர ணையை வாபஸ்பெற வேண்டுமென சபாநாய கரை வலியுறுத்தினார். ஆனால் அதற்குச் சபாநாயகர் சம்மதிக்கவில்லை.

இவ்வாறான நிலையில் சனாதிபதி நிலை குறித்த ஒரு நெருக்கடிநிலை தோன்றிப் பாரா ளுமன்றத்துக்கும் நிறைவேற்று அதிகாரத் துக்கும் இடையே பெரும் போட்டி எழுந்தது.

இந்த நெருக்கடிநிலையிலிருந்து நீங்கப் பிரேமதாச பல யுக்திகளைக் கையாள வேண் டியிருந்தது. யாழ்.மாவட்ட பா.உ.கள் எட்டுப் பேர் பாராளுமன்றம் சென்றனர். ஐ.தே.க.பாரா ளுமன்ற உறுப்பினர்களில் தமக்கு எதிராகக் கையொப்பமிட்டோர் யார் எனப் பிரேமதாச அறிந்துகொள்ள முயன்றார்.

இறுதியில் மனுவிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பங்களில் தனக் குச் சந்தேகம் இருப்பதாகக் கூறிச் சபாநாயகர் மனுவை நிராகரித்தார். இதற்குச் சபாநாயகரை "சம்மதிக்க" வைக்கப் பிரேமதாச சாம,பேத, தான,தண்டங்கள் அனைத்தையும் பாவித் ததாக அப்போது பேசப்பட்டது.

இதன் பின்னர் 2001 ஆம் ஆண்டு சந்திரி காவின் இரண்டாவது பதவிக் காலத்திலும் இவ்வாறான முரண்பாடு ஒன்று எழுந்தது. சில பொ.ஐ.மு.பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐ.தே.க.விற்கு மாறக் கூடிய சூழ்நிலையில் பாராளுமன்றத்தை ஒத்திவைத்த சந்திரிகா ஜே.வி.பியுடனான நன்னடத்தை ஒப்பந்தம் மூலம் பொ.ஐ.மு ஆட்சியைத் தக்கவைக்க முயன்றார். அது முடியாத நிலையில் பாரா ளுமன்ற ஆட்சியைக் கலைக்க வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது.

இவை இரண்டும் சனாதிபதியின் கட்சியி னரே-உள்முரண்பாடு காரணமாக சனாதி பதிக்கு நெருக்கடியை ஏற்படுத்திய சம்ப வங்களாகும்.

ஆனால் 2001 ஆம் ஆண்டுத் தேர்தலில் சனாதிபதிக்கு எதிரான கட்சி பாராளுமன் றத்தைக் கைப்பற்றியதையடுத்து இன்னொரு வகையில் சனாதிபதி-பாராளுமன்ற முரண்பாடு அவற்றுக்கு இடையேயான அதிகார வரை யறைகள் வாய்ப்புப் பார்க்கப்பட்டு வருகின்றன.

ஆட்சியமைப்பிலிருந்து ஆரம்பமாகிய இம்முரண்பாடு தினமும் ஏதோ ஒரு வகையில் இவ்விரு அதிகார சக்திகளுக்கும் இடையி லான போட்டியை வெளிப்படுத்திய வண்ணமே உள்ளதெனலாம். இதன் ஒரு வடிவமாக உயர்நீதிமன்றத்துக்கு இவ்விவகாரம் சென்றிருக்கிறது. விவகாரம் இத்துடன் முடி வடைந்துவிடவில்லை. உயர்நீதிமன்ற நீதிய ரசர் விசாரணையின்போது நடந்துகொண்ட விதம் குறித்துப் பாராளுமன்றத்தில் பிரேரணை கொண்டுவர ஐக்கியதேசியக்கட்சி முடிவு செய்திருக்கிறது. இப்போதைய பிரதம நீதிரசர் சரத் என் சில்வாவை ஐ.தே.க.வின் பலத்த எதிர்ப்பின் மத்தியில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்திருந்தமை இங்கு குறிப் பிடத்தக்கதாகும். எனவே முரண்பாடுகளும், சிக்கல்களும்,விவகாரங்களும் ஒன்றன் மீது ஒன்றாகக் கவிந்து கொண்டே செல்கின்றன.

இதற்கு முடிவு...?

கம்யூனிஸ்ட்டுக்களின் புரட்சியை/வளர்ச்சியை ஒடுக்கும் நோக்குடன் பிரான்சில் டிகோல் என்பவர் பின்பற்றிய நிறைவேற்று அதிகாரமுறை அமெரிக்க சனா


அத்துலத் முதலி

திபதி ஆட்சி முறை பாரம்பரியமாகப் பின் பற்றப்பட்ட பாராளுமன்ற முறை இவற்றைக் கலந்து ஜே.ஆர். உருவாக்கிய அரசியலமைப்பு சிறிலங்காவுக்குப் பல்வேறு நெருக்கடிகளை யும் தோற்றுவித்து வருகிறது. நிறைவேற்று அதிகார முறையைக்கொண்டு வந்த ஜே.ஆர்ஜெய வர்த்தன தனது ஆட்சிக் காலம் முடிந்ததும் "நிறைவேற்று அதிகாரமுறை பரீட்சார்த்தமே அதனைக் கைவிட்டுப் பிரதமர் தலைமையி லான ஆட்சியைக் கொண்டு வரலாம்" எனக் கூறியிருந்தார்.

இன்றைய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தான் பதவியேற்று ஆறுமாத காலத்தில் இம் முறை ஒழிக்கப்படும் எனக் கூறிப் பதவிக்கு வந்தார். இன்றைய பிரதமர் ரணில் விக்கிரம சிங்க நிறைவேற்று அதிகாரம் காரணமாக பல சிக்கல்களை எதிர்கொண்டுள்ள போதி லும் அதனை நீக்கிவிடும் எண்ணம் அவருக்கு இல்லை. ஏனெனில் அடுத்து அந்தப் பதவியே அவரது குறி. இந்நிலையில் பரிதாபத் திற்குரியவர்கள் மக்களே.

**வேலவன்**

## களுத்துறை மாவட்டத்தில் 20 ஆயிரம் அங்கவீனர்கள்!

(கொழும்பு)

களுத்துறை மாவட்டத்தில் அங் கக் குறைபாடுடைய 20,000 பேருக் குப் புனர்வாழ்வு அளிக்கும் திட்ட த்தை சமூக அபிவிருத்தி அமைச்சு விரைவில் அமுல் செய்யவுள்ளது. இதற்கென இவ்வமைச்சினால் 3 கோடி ரூபா செலவிடப்படவுள்ளது.

மாவட்டங்கள் ரீதியாக அங்க வீனர்களின் தேவைகளை நிறை வேற்றுவதற்காக 18 புனர்வாழ்வு நிலையங்கள் அமைக்கப்பட வுள்ளதாக அந்த அமைச்சுக் கூறி யுள்ளது.

## 23 பேர் மரணம்

காலி கரப்பிட்டிய வைத்திய சாலையில் இருதய சத்திர சிகிச்சை நிறுத்தப்பட்ட பின்னர் இரு தய சத்திர சிகிச்சைக்காகக் காத்திருக்கும் பட்டியலில் இது வரை 23 பேர் மரணமடைந்துள் ளனர். அவர்களில் சிறுவர்களே அதிகமாகும். தாதிகளின் சேவை பிரச்சனையால் கடந்த யூலை முதல் இந்த சத்திரச் சிகிச்சை நிறுத்தப்பட்டுள்ளது.

## கடற்கரையோர வாடிவீடுகள் படையினரால் தினமும் சோதனை

(யாழ்ப்பாணம்)

இளவாலை கடற்கரையோர வாடி வீடுகளைச் சோதிக்கும் நடவடிக் கைகளில் படையினர் ஈடுபட்டுள்ள னர். கடந்த சில நாட்களாக நடை பெறும் இந்நடவடிக்கையின் போது மேற்படி வீடுகளில் மீனவர்கள் இல் லாத நேரத்தில் புகுந்து அங்குள்ள பொருட்களைச் சேதமாக்கும் விதத்தில் சோதனை செய்வதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அப்பகுதிக்குப் பொறுப்பான கடற்படைத் தளப திக்குச் சுட்டிக் காட்டப்பட்டும் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப் படாததுடன் இந்நெருக்கடி அதி கரித்து வருவதாகத் தெரிவிக் கப்படுகிறது. (33)

# வாகனக் கடத்தல்கள் தொடர்ந்து அதிகரிப்பு தடுக்க உள்துறை அமைச்சு தீவிர முயற்சி

## 10 மாதங்களில் ஆயிரம் வாகனங்கள் கடத்தல்

(கொழும்பு)

**அதிகரித்து வரும் வாகனக் கடத்தல்களைத் தடுப்பதற்காக அரசாங்கம் பலதரப்பட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.**

இந்த நோக்கத்திற்காகச் சாதாரண உடை தரித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் நாளாந்த நடவடிக்கைகளில் ஈடுபட இருப்பதாக உள்துறை அமைச்சுக் கூறுகின்றது.

இவ்வாறான 5 குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன. இந்தக் குழுவினர் கல்கிசை, சிலாபம், களனி,கண்டி, நிவகொட ஆகிய பிரதேசங்களில் திடீர் சோதனைகளை நடத்தவுள்ளார்கள். இந்தப் பகுதிகளில் தான் அதிகமான வாகனக் கடத்தல்கள் நடைபெறுகின்றன.

அதேசமயம் தென்னிலங்கையில் கடத்தப்படும் வாகனங்கள் வடக்கு கிழக்குப் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த மோசடிச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக வன்னிப் பகுதிக்குள் செல்லும் வாகனங்கள் அனைத்தும் தீவிரமாகச் சோதனை செய்யப்படவுள்ளன.

கடந்த 10 மாத காலத்தினுள் சுமார் 1000 வாகனங்கள் கடத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது. இவற்றில் பல சொகுசுக் கார்கள், முச்சக்கர வண்டிகள்,லொறிகள் என்பன அடங்குகின்றன.

வாகனக் கடத்தல்களில் 04 குழுக்கள் இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது.

# பனைவள அபிவிருத்திக்கு யாழ். பல்கலையில் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்தி மேம்பாட்டுக் கல்வியைப் பல்கலைக்கழக ரீதியானதாக விருத்திப்படுத்து வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

மேற்படி வளம் தமிழ் தேசிய இனத்தின் பிரதானமான ஒரு வளமாகக் காணப்படுவதுடன் இதனை எதிர்காலத்தில் மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தைக் கருத்திற் கொண்டு இத் திட்டத்தை மிகவிரைவில் நடைமுறைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர மேலும் தெரிவித்துள்ளார். (33)

# சிறிலங்கா சனாதிபதி விரைவில் இந்தியா பயணம்

(கொழும்பு)

யுனிசெவ் அமைப்பால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள நிகழ்வில் பங்குபற்றுவதற்காக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடுத்த வாரம் இந்தியா செல்லவுள்ளதாக பொதுஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியத் தலைவர்களைச் சந்தித்து சனாதிபதி உரையாடுவார் எனவும் முக்கியமாக ஒஸ்லோ சமாதானத் திட்டத்தில் அபிவிருத்தி பற்றி கலந்துரையாடுவார் என்றும் தெரியவருகிறது.

# மாவீரர் தினத்தை எழுச்சியுடன் யாழ்.இல் கொண்டாட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தை மிக எழுச்சி பூர்வமாக யாழ்குடா நாட்டில் நினைவு கூருவதற்கு ஏற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறன.

அந்த அடிப்படையில் தேசிய எழுச்சிப் பேரவையால் இது தொடர்பான நடவடிக்கைகள் ஊரக மற்றும் பிரதேசமட்டங்களில் நடைபெற்று வருவதுடன் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள கோப்பாய், கொடிகாமம், சாட்டி போன்ற மாவீரர் துயிலும் இல்லங்கள் மாணவர்கள் மற்றும் சமூகதொண்டர்களினால் சிரமதானப் பணிகள் மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. (33)

# பாதுகாப்பு அமைச்சு பொறுப்பையேற்க சனாதிபதி முனைவது யதார்த்தமாகாது

## - மல்வத்த பீடாதிபதி அறிவுறுத்து

(கொழும்பு)

தற்போதைய சமாதான சூழ்நிலையில் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை சனாதிபதி ஏற்றுக்கொள்ள முனைவது யதார்த்தமாகாது என மல்வத்த மகாநாயக்கர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளருக்கு செவ்வியளித்த மல்வத்த மகாநாயக்கர் வணக்கத்திற்குரிய ரம்புக்வெல ஸ்ரீ விபஸ்ஸி தேரர் பாதுகாப்பு அமைச்சை சனாதிபதி, பொறுப்பேற்க வேண்டியிருப்பின் அதனை முன்னரே செய்திருக்க வேண்டும். தற்போது அதற்குச் சூழ்நிலை இல்லை எனக் கூறினார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்காலத் திட்டவரைவு தொடர்பில் விளக்கினார். அரசாங்கம் தமக்கு வழங்க நிர்ப்பந்தித்துள்ளதாகவும் இது தொடர்பில் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தம்முடன் தொடர்புகொண்டுள்ளதாகவும் மல்வத்த மகாநாயக்கர் தெரிவித்தார். (32)

# சிங்கள-தமிழ் கலைக் கூடலில் நடந்த தாக்குதல்; பொலிஸ் திணைக்களம் மீது அரசு விசனம்

(கொழும்பு)

சிங்கள-தமிழ் கலைக் கூடலில் நடந்த தாக்குதலையடுத்து பிரதமர் பொலிஸ் திணைக்களத்தை குற்றம் சுமத்தி உள்ளார்.

28ஆம் திகதி சிஹல உறுமய கட்சியினர் கலைக்கூடலில் கலந்து கொண்டவர்களைத் தாக்கும் பொழுது அன்றையதினம் கடமையில் ஈடுபட்டிருந்த வடமத்திய மாகாண உதவி பொலிஸ் அத்தியட்சகர் போதி லியனவுக்கு பிரதமர் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கலகக்காரர்கள் தாக்குதல் நடத்திய பொழுது அதற்கு எதிராக உதவி பொலிஸ் அத்தியட்சகர் நடவடிக்கை எடுக்காதமைக்கு விளக்கம் கோரப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக அமைச்சரவையில் திஸ்ஸ அத்தநாயக்கா கலகக்காரர்களுக்கு கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என பிரதமருக்கு அறிவித்துள்ளதுடன், பிரதமர் இதற்குத் தாம் நடவடிக்கை எடுக்க உள்ளதாக அறிவித்துள்ளார்.

# தளபாடங்கள் படையினர்வசம் பாடசாலைகளில் மாணவர் அவலம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவக வலயப்பாடசாலைகளின் தளபாட வகைகளை இராணுவம் தன் பயன்பாட்டில் வைத்துள்ளதால் இவ் வலயப் பாடசாலைகளில் தளபாடப் பற்றாக்குறை நிலவுவதாக தீவக வலயக்கல்விப் பணிமனை வட்டாரங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

மேற்படி பிரதேசத்தை விட்டுமக்கள் இடம்பெயர்ந்ததைத் தொடர்ந்து அங்குள்ள பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் குடியேறிய படையினர் பாடசாலை உபகரணங்களை(கதிரை,மேசை) தமது தேவைகளுக்காகப் பயன்படுத்தியதுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து அவற்றில் இருந்து படையினர் வெளியேறிய போது அங்கு தாம் பயன்படுத்திய தளபாடங்களையும் எடுத்துச் சென்றுள்ளதனால் இப்பற்றாக் குறை நிலவிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றன.(33)

# குடாநாட்டில் மிதிவெடி அகற்றும் பணி ஆளணி பற்றாக்குறையால் தாமதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்தகாலப் போர் நடவடிக்கைகளுக்காகப் புதைக்கப்பட்ட மிதிவெடிகளை அகற்றுவதற்குப் போதிய ஆளணி பற்றாக்குறை நிலவுவதால் இவற்றை அகற்றும் பணி தாமதப்பட்டு வருவதாக மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குடாநாட்டில் 30சதவீத நிலம் இம் மிதிவெடியால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதால் இவற்றை அகற்றுவதில் ஏற்பட்டுள்ள கால தாமதம் மீள்குடியமரும் மக்களின் செயற்பாடுகளையும் பாதித்து வருவதாக தெரிவிக்கப்படுவதுடன் இம்மிதிவெடி அபாயமுள்ள நிலப்பரப்பில் பெரும்பகுதி விளைநிலங்களாகக் காணப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளன. (33)

## ஈரானிய தூதுக்குழு வருகை

ஈரானிய தூதுக்குழுவொன்று சிறிலங்கா வந்துள்ளது. இரண்டு நாடுகளுக்குமிடையில் வர்த்தகம், உல்லாசப் பயணத்துறைசார் உறவுகளை ஊக்குவிப்பது இக் குழுவின் நோக்கமாகும்.

ஈரானிய தூதுக்குழுவில் அரசாங்க அதிகாரிகள், பயணமுகவர்கள்,ஊடகவியலாளர்கள் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

# லண்டனில் இலங்கைத் தமிழரிடையே வன்முறைகள் தொடர்ந்து அதிகரிப்பு

## - ஏழு நாட்களில் 11 பேர் மரணம்

லண்டன் வாழ் இலங்கைத் தமிழர்களிடையே வன்முறைகள் அதிகரித்து வருவதாக லண்டன் குற்றவியல் பிரிவு தெரிவித்துள்ளது.

லண்டன் குற்றவியல் பிரிவு உதவி ஆணையாளர் டெரிக் கவர் இது குறித்து எச்சரிக்கை விடுத்துள்ளார். அவர் இது பற்றிக் குறிப்பிடுகையில், ஏழு நாட்களில் பதினொரு பேர் கொல்லப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் குழுக்கள் குழுக்களாக வன்முறைகளில் ஈடுபட்டு அந்த வன்முறைகள் கொலையில் முடிவடைகின்றன.

இதுவரை எல்லாமாக 600 கொலைகள் நடந்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.


## வாழ்த்துகின்றோம்



கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரும் கிளி/முல்லை கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத் தலைவரும் சகல பொது நிறுவனங்களிலும் பிரதிநிதியாக செயற்பட்ட வருமான

### திரு.வைத்திலிங்கம் குகராசா

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதவானாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதையிட்டு வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்,
கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
கிளிநொச்சி. (3148)

## பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதிக்குக் கீழ்வரும் பணிநிலைக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து வேண்டுகை கோரப்படுகின்றது. ஆர்வமுடையோர் தங்களது தன்வரலாறு அடங்கிய [சுயவிபரம்] வேண்டுகைகளை 10.11.2003ஆம் நாளுக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

**ஆய அலுவலர் (ஆண்கள் மட்டும்)**

**கல்வித் தகைமை:-** க.பொ.த.(உ/த) அல்லது க.பொ.த.(சா/த) உடன் ஈராண்டிற்குக் குறையாத துறைசார் பட்டறிவு.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-**

பொறுப்பாளர்,
மனிதவள மேம்பாட்டுப்பகுதி, வருவாய்ப்பகுதிச் செயலகம்,
கிளிநொச்சி.

**நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள்:-** 11.11.2003 காலை 10.00 மணி.

**நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம்:-** வருவாய்ப்பகுதிச் செயலகம், யாழ்சாலை, கிளிநொச்சி.

குறிப்பு :- நேர்முகத்தேர்வுக்குக் கடிதம் அனுப்பப்படமாட்டாது. நேர்முகத்தேர்வுக்குச் சமுகமளிப்பவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் வரவும்.

(சி-8691)

## சிந்தனைக்கு



மக்களின் ஆதரவுடன் மக்களின் மேம்பாட்டிற்காக நிகழ்த்தப்படும் சமூக சீரமைப்புகளே நிரந்தரமானதாக நிலைத்து நிற்கும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 04-11-2003

## சம அளவில் பங்கீடு!

சமாதானத்தின் முழு அளவிலான பலன்களும் இலங்கையின் அனைத்து மக்களையும் சம அளவில் சென்றடைதல் வேண்டும் என்பது இன்று பொதுவாக அரசாங்கத்தினால் பலரால் முன்வைக்கப்படும் கருத்தாக உள்ளது. விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பாக அரசாங்கத் தரப்பில் முதல் முதலில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள பேராசிரியர்பீரிசும், "சமாதான நடவடிக்கை களின் முழு அளவிலான பலன்களும் நாட்டின் தெற்கு, கிழக்கு, வடக்குப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அனைவரா லும் சம அளவில் பகிர்ந்து கொள்ளப்படுதல் வேண்டும்" எனக் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கும்-சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான யுத்தம் இலங்கை பூராவிற்கும் ஆனது எனினும் அவ் யுத்தமானது முழு அளவில் எனக் கூறக்கூடிய வகையில் வடக்கு-கிழக்கி லேயே நடைபெற்றது. வேறுவிதமாகக் கூறுவதானால், தெற்கு வடக்கு-கிழக்கில் யுத்தத்தை நடாத்தியது என்றே கூறலாம். ஆகையினால், யுத்தமானது அழிவையும், சேதத் தையும்,இழப்புக்களையும் வடக்கு-கிழக்கிற்கே கொடுத்தது. சில வேளைகளில் மட்டும் தெற்கு பாதிப்பிற்கு உள்ளாகிய துண்டு.

இதேவேளை, யுத்தம் எவ்வாறு இலங்கைக்கானது எனக் கூறப்பட்டதோ அதேபோன்று சமாதானம் என்பதும் இலங்கை பூராவிற்குமானதே. ஆனால், சமாதானத்தை மீளக்கொணர்தலுக்கு வடக்கு-கிழக்கிற்கு யுத்த நிறுத்த அறிவிப்பு மட்டும் போதுமானதாக இல்லை. இயல்பு வாழ்க்கையைக் கொணர்வதற்கும் வேறு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. ஆனால், தெற்கிற்கு யுத்த நிறுத்தம் என்ற ஒன்றேபோது மானது. அதாவது, மோதல் நிறுத்தமே போதும். அங்கு அமைதியும் சமாதானமும், இயல்வு வாழ்க்கையும் திரும்பப் பெறப்பட்டுவிடும்.

இந்த வகையில், மேற்கூறப்பட்ட இரண்டு அம்சங்களிலும் காணப்படும் முரண்பாடுகளே வடக்கு-கிழக்கிற்கும், தெற்கிற்கும் இடையிலான வேறுபாடுகளை வெளிக்காட்டப் போதுமானதாகும். அதாவது, வடக்கு-கிழக்கில் யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டபோதும் அங்கு இன்றும் மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பவில்லை. இராணுவ மேலாதிக்கம் அச்சுறுத்தல் என்பன தொடர்ந்தவண்ணமே உள்ளன.

இதனை யுத்த நிறுத்தம் கைச்சாத்தாகி 20 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் மக்கள் சொந்த நிலங்களில் குடியேற முடியாது உள்ளமையும், அவர்களினால் சிதைக்கப்பட்ட பொருளாதார வாழ்வில் இருந்து அவர்கள் மீண டெழுவதற்கான உதவிகள் கிடைக்கப்பெறாமையும், யுத்த கால பாதிப்புக்களில் இருந்து அவர்கள் விடுபட முடியாது உள்ளமையும் இதனை வெளிக்காட்டுபவையாகவுள்ளன.

ஆனால், தெற்கில் நிலைமை அவ்வாறானதாக இல்லை. அரசாங்கம் யுத்தத்தினால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை துடைத்துள்ளது. அந்நிய நாட்டு முதலீடு வேலை வாய்ப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது. யுத்தத்தின் வடுக்களை மக்கள் மறந்துவிட்டனர். சமாதானத்தின் பலனாக அமைதியான வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டனர். சிறிலங்கா அரசின் பொருளாதார நிலையும் மேம்படத் தொடங்கியுள்ளது.

இதற்கு மாறாக, யுத்த நிறுத்தம் அமுலில் உள்ள போதும் வட-கிழக்கில் சிறிலங்கா ஆயுதப் படைத் தரப்பு தனது கெடுபிடிகள் நடவடிக்கைகளைக் கைவிடவில்லை. மக்களின் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களைவிட்டுக் கொடுக்கவில்லை. அரசாங்கமும் இதற்கு முயற்சிக்கவில்லை. அத்தோடு சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் யுத்தம் குறித்த பீதியை தொடர்ந்தும் ஏற்படுத்துவதாகவும், சமாதான முயற்சிகள் எப்பொழுது முறிவடையும் என்ற ஐயத்தைத் தோற்றுவிப்பதாகவும் ஆகியுள்ளது.

இதேவேளை, தெற்கில், மக்களின் சுதந்திர நடமாட்டம் உறுதி செய்யப்பட்டதாகியுள்ளது. வீதிச் சோதனைச் சாவடிகள், சோதனைகள் நிறுத்தப்பட்டு ஆயுதப் படைத் தரப்பின் பிரசன்னம் குறைக்கப்பட்டுள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கையில் ஆயுதப் படைத் தரப்பின் இடையூறுகள் தவிர்க்கப்பட்டுள்ளன. அதாவது, யுத்தத்தின் குறிகாட்டிகள் ஒழிக்கப்பட்டு, அமைதியான சிவில் நிர்வாகத்திற்கான நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில், யுத்தத்தின் பாதிப்புக்களில் வட-கிழக்கிற்கும், தெற்கிற்கும் இடையில் அதிகளவிலான வேறுபாடுகளும், யுத்த நிறுத்த காலத்தில் அனுபவிக்கப்படும் சமாதானத்தின் பலாபலன்களிலும் பெரும் வேறுபாடுகளும் காணப்படு கையில், எவ்வாறு சமாதானத்தின் பலாபலன்கள் யாவும் சமமான முறையில் பங்கிடப்பட வேண்டும் என ஆட்சியாளர்கள் கோர முடியும்? இது எந்த வகையில் நீதியானதும், பொருத்தப்பாடானதுமான நடவடிக்கையாக இருக்கும்?

சமாதானத்தின் பலன்களில் பெரும்பாலானவை யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கே பெருமளவில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். யுத்தத்தை நடத்தியவர்களுக்கும்- யுத்தத்தினால் பாதிப்பிற்குள்ளானவர்களுக்கும் இடையில் சம பங்கீடு என்பது பொருத்தப்பாடான தொன்றாகமாட்டாது. அவ்வாறு சம பங்கீடு ஒன்று நடத்தப்படுமானால் வட-கிழக்கிற்கும், தெற்கிற்கும் இடையில் யுத்தத்தினால் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வை அது மேலும் அதிகரிப்பதாகவும், மேலும் முரண்பாடுகளுக்கு வழி வகுப்பதாகவும் அமையுமே தவிர சமாதானத்தை நிலை நிறுத்த உதவமாட்டாது.

# புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகள் நான் எதிர்பார்த்த எல்லையைத் தாண்டிவிட்டது

## சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

விரிவான அதிகாரப் பரவலாக்கலே வடக்குக் கிழக்கிற்கு நிரந்தரத்தீர்வாக அமையும் என சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

ஆட்சிப்பீடத்தில் இருக்கும் எந்தத் தரப்பும் நாட்டு நலனுக்காகத் தம்மை அர்ப்பணிக்க வேணடும். அதிகாரப் பரவலாக்கலைச் சாத்தியமாக்க வேண்டும் என்றும் சனாதிபதி கூறியுள்ளார்.

இவ்வாறான ஒரு நடைமுறையை உருவாக்குமாறு விடுதலைப் புலிகளையும் கேட்டுக்கொள்கிறேன். நேற்று முன்தினம் மேல்மாகாண பத்திரமுல்லப் பிரதேசத்தில் புதிய கட்டடத்தொகுதியைத் திறந்து வைக்கையில் சனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

இடைக்கால நிர்வாகம் பற்றிய விடுதலைப் புலிகளின் யோசனைகளின் பிரதி எனக்குக் கிடைத்துள்ளது.

இந்த யோசனைகள் தாம் எதிர்பார்த்த எல்லைகளைத் தாண்டிச் சென்றுவிட்டது. இது குறித்து எமது கட்சி அங்கத்தவர்களுடனும் பின்னர் அமைச்சரவை உறுப்பினர்களுடனும், நிபுணர்களுடனும் கலந்துரையாடவுள்ளேன் என்றும் கூறியுள்ளார்.(32)

# சமாதானத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் அரசு விரைவாக அதனை முன்னெடுக்க வேண்டும்

## - கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால நிர்வாகவரைபானது, அவர்களது ஈழக்கோரிக்கையை விடக் குறைவானது என்று இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன கூறியுள்ளார்.

இதுவரை காலமும் தமிழீழக் கோரிக்கை எனக் கூறிவந்த விடுதலைப்புலிகள், இன்று அந்தக் கோரிக்கைக்கு குறைவான சமஸ்டி முறையிலான அதாவது ஒருநாட்டிற்குள் இரண்டு அதிகாரப் பிரிவுகள் எனும் அம்சத்திற்கு விட்டுக் கொடுத்து வந்திருப்பது வரவேற்கத்தக்கது என்று கூறிய அவர்,

அதேநேரம் ஜே.வி.பி.யோ, சிஹல உறுமயவோ எதிர்ப்பது என்பது நாட்டை மீண்டும் யுத்தத்திற்கு கொண்டுசென்றுவிடும் நிலையை உருவாக்கிவிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இடைக்கால நிர்வாக வரைவை எதிர்ப்பவர்களை சமாளித்து பேச்சுக்களைத் தொடர்ந்தால் மட்டுமே நாட்டின் அபிவிருத்தி ஏற்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து பார்க்கும்போது, தற்போதைய சமாதானப் பேச்சுக்கள் இவ்வளவு தூரம் முன்னேறி இருக்கின்றது. இதனை இருதரப்பும் கைவிடக்கூடாது எந்த ஒரு சக்தியினாலும் இந்த சமாதானத்தைத் தடுக்காமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால் விரைவில் விடுதலைப் புலிகளுடன் அரசு சமாதானத்தை முன்னெடுக்க வேண்டும். இதனடிப்படையில் அவர்களுடன் பேரம் பேசி, எதைக் கொடுக்க முடியும், எதைத் தவிர்க்க முடியும் எனும் இணக்கப்பாட்டுடன் ஒரு இடைக் காலத் தீர்வை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பது சிறப்பானது.

சனாதிபதியும் தனது பொறுப்பான கடமைகளைச் செய்ய வேண்டும் என்றும் கூறியுள்ளார்.(32)

# சுகாதார சேவைகளின் சம்பள முரண்பாட்டு அறிக்கையை இன்று வெளியிட நிர்ப்பந்தம்

## இணக்கப்பாடின்றேல் போராட்டம்

(கொழும்பு)

சுகாதார சேவைகளின் சம்பள முரண்பாடுகள் தொடர்பான திறைசேரி ஆணையாளரின் அறிக்கை இன்று கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார சேவைகள் தொழில்சங்கக் கூட்டமைப்பு அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பிரதமர் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவயின் உபகுழுத் தலைவர் அமைச்சர் கருஜெயசூரியவிடம் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

சம்பள முரண்பாடுகள் தொடர்பான அறிக்கையை இன்றைய தினத்துக்குள் தம்மிடம் கையளிப்பதாக முன்னர் உறுதியளிக்கப்பட்டதாகத் தொழில்சங்கக் கூட்டமைப்பின் எற்பாட்டாளரான சமன் ரத்னசிங்க கூறியுள்ளார்.

இந்த உறுதி மொழியின் காரணமாக தொழிற் சங்கங்கள் தற்காலிகமாக வேலை நிறுத்தத்தைக் கைவிட்டதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

அடுத்து திறைசேரி ஆணையாளரின் அறிக்கை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தால் மட்டுமே பேச்சுவார்த்தைகள் நடத்த முடியும் என்றும் கூறியுள்ளார்.

எனினும் பேச்சுவார்த்தைகள் நடத்தி பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாதபட்சத்தில் மீண்டுமொரு தொழிற் சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கும் நிலை உருவாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# மேல் கொத்மலை நீர்மின்சக்தித் திட்டம் எத்தகைய எதிர்ப்புவரினும் நிறைவேற்றப்படும்

## -பிரதியமைச்சர் நவீன் திஸாநாயக்க

(கொழும்பு)

எவ்வாறான எதிர்ப்புக்கள் வந்தாலும் மேல் கொத்மலை நீர்மின்சக்தித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனப் பிரதி அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் அமுல் செய்யப்படுவதன் மூலம் அதிக வேலைவாய்ப்புக்களை இளைஞர் யுவதிகளுக்கு வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மறைந்த அமைச்சர் காமினி திஸாநாயக்கவின் 9ஆவது நினைவு நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் கினிகத்தரை மத்தியகல்லூரியில் இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

இதில் பங்கேற்று உரையாற்றிய பிரதி அமைச்சர் நவீன் திஸாநாயக்க அரசாங்கத்தின் சுற்றுநிருபம் காரணமாகத் தற்சமயம் புதிய வேலைவாய்ப்புக்களை வழங்கமுடியாதுள்ளது. எனினும் விரைவில் இந்தச் சுற்றுநிருபம் விலக்கிக்கொள்ளப்பட்டு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படவிருப்பதாகவும் அவா குறிப்பிட்டார். மேல்கொத்மலைத் திட்டத்தை இ.தொ.கா எதிர்த்து வருவது குறிப்பிடத்தக்கது. (32)

# மாவீரர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## -நாளை ஆரம்பம்

தமிழீழ விளையாட்டுத் துறையின் கிளிநொச்சி மாவட்டப்பிரிவு நடாத்தும் மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

மேற்படி சுற்றுப்போட்டியில் கிளிநொச்சி, முல்லைமாவட்ட அணிகள் மட்டுமே பங்கு கொள்ளவுள்ளன.




# அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி 2004இல் சிறிலங்கா வருகை

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில சிறிலங்காவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது.

ஆறுவார காலப் பயணமாக சிறிலங்கா வரும் அவுஸ்திரேலிய அணி மூன்று டெஸ்ட் மற்றும் ஐந்து ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடவுள்ளது.

1999இல் அவுஸ்திரேலியா கடைசியாக சிறிலங்காவில் டெஸ்ட் தொடரில் விளையாடியுள்ளது. இந்தத் தொடரில்1-0 என்ற ரீதியில் அவுஸ்திரேலிய அணி சிறிலங்கா அணியிடம் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஓயாத அலைகள் - 03 இன் 4ஆம் ஆண்டு வெற்றிவிழா

ஓயாத அலைகள் 03 வெற்றிச்சமரில் 04ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வும் அதே சமரில் வீரகாவியமான சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் சிறப்புத் தளபதி லெப். கேணல இராகவன், தாக்குதல் தளபதி லெப். கேணல் நியூட்டன் அவர்களின் நினைவு நிகழ்வும் நேற்று முன்தினம் மிக எழுச்சிபூர்வமாகக் கொண்டாடப்பட்டது.

வன்னிப்பெருநிலப்பரப்பில் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாசறை ஒன்றில் போராளி புரட்சி தலைமையில் மாலை 5.40 மணிக்கு ஆரம்பமான நினைவு நிகழ்வில் பொது ஈகச்சுடரினை தளபதி செல்வராசா அவர்கள் ஏற்றிவைத்தார். தேசியக் கொடியினை மூத்த தளபதி பொட்டு ஏற்றிவைத்தார். மாவீரர்களின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை தளபதி கேணல் பானு ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து லெப். கேணல் இராகவனின் திரு உருவப்படத்திற்கான மலர் மாலையினை தளபதி அஜந்தி அணிவித்தார். லெப் கேணல் நியூட்டனின் உருவப்படத்திற்கு தளபதி மாஸ் மலர்மாலை அணிவித்தார். பொது மாவீர்களின் படத்திற்கான மலர்மாலையினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையின் சிறப்புத் தளபதி நகுலன் அணிவித்தார். தொடர்ந்து போராளிகள் அனைவரும் மலர் வணக்கம் செலுத்தியதைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மாலதிபடையணி,சோதியாபடையணி, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி, பொன்னம்மான் கண்ணிவெடி பிரிவு போராளிகளின் கலை நிகழ்வுகள் சிறப்பாக இடம் பெற்றன. இந்நிகழ்வில் நினைவுரையினை சிறப்புத் தளபதி நகுலனும், சிறப்புரையை மூத்த தளபதி பொட்டுவும் நிகழ்த்தினர்.

# இந்தியப்பாதுகாப்பு அமைச்சர் கருணாநிதியுடன் சந்திப்பு

(சென்னை)

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் நேற்று சென்னைக்கு வந்து முன்னாள் தமிழக முதலமைச்சர் கருணாநிதியை அவரது வீட்டில் சந்தித்து உரையாடியுள்ளார்.

இச்சந்திப்பு ஒரு மணித்தியாலத்திற்கு மேல் நீடித்தது. "பொடோ" சட்டத்தின்கீழ் ம.தி.மு.க.பொதுச் செயலர் வை.கோ. ஒருவருடத்திற்கும் மேலாக சிறை வைக்கப்பட்டிருப்பது குறித்து கருணாநிதி வருத்தமும் கவலையும் தெரிவித்துள்ளதாக ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூறியுள்ளார். வேறுபல முக்கிய விடயங்கள் குறித் துப் பேசியதாகவும் அவை குறித்து வெளியே சொல்லமுடியாது என்றும் பெர்னாண்டஸ் கூறியுள்ளார்.

"பொடோ" சட்டத்தைத் திரும்பப் பெறவேண்டுமென்று பாதுகாப்பு அமைச்சரிடம் தான் வலியுறுத்தியதாகக் கருணாநிதி கூறியுள்ளார்.

பொடோ சட்டம் உட்பட பல்வேறு விடயங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தி.மு.க. டிசம்பர் முதல் திகதியில் மத்திய மாநில அரசு அலுவலகங்களின் முன் மாநிலம் தழுவி போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# இந். உடன் கருத்துக்கூறாது இருப்பது தந்திரோபாய நடவடிக்கையாகும்

## நேரு பல்கலைக்கழகப் பேராசிரியர் சகாதேவன்

(லண்டன்)

விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை பற்றி பல்வேறு நாடுகள் கருத்துத் தெரிவித்துள்ளபோதிலும், இந்தியா தனது கருத்தைத் தெரிவிப்பதற்கு முன் இலங்கையில் என்ன கருத்து உருவாகிறது என்பதைப் பொறுத்துத் தான் தன்னுடைய கருத்தைத் தெரிவிக்கலாம் என்று சொல்லலாம். இரண்டாவதாக ஒரு முக்கியமான சம்பவத்தில் முக்கியமான விடயத்தில் உடனடியாக கருத்தைத் தெரிவித்து இந்தியாவின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு மற்றொரு கருத்து இலங்கையில் வரவேண்டாம் என்று எதிர்பார்க்கலாம் ஆகையினால் இது தாமதிப்பதற்கு ஒரு தந்திரோபாய காரணம் என்றே கருதப்படலாம் என புதுடில்லி நேரு பல்கலைக்கழக பேராசிரியர் சகாதேவன் தெரிவித்தார். இவர் மேலும் சில கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

கேள்வி: இந்த விடயத்தைப் பற்றி இந்திய அரசின் நிலை அல்லது கருத்து என்னவாக இருக்கக் கூடும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?

பதில்: முக்கியமாகத் தற்போது எழும்பி வருகின்ற கருத்து இலங்கையில் ஒரு பிளவுபட்ட கருத்தாகவே இருக்கிறது. அந்த பிளவுபட்ட கருத்து நிலவுகின்ற நேரத்தில் இந்தியா தன்னுடைய கருத்தையே தெரிவிக்கும்போது ஒரு மிதமான கருத்தைத் தெரிவிக்கும் நேரடியாகவே இந்தியா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தன்னை இலங்கை அரசியல் நிலையில் ஈடுபடுத்திக் கொள்ளாது என்று தெரிகிறது. ஏனென்றால், இந்தியா தனது எதிர்ப்பைத் தெரிவிப்பதானால் சில சிங்கள அமைபபுக்கள் எதிர்ப்பைத் தெரிவித்து விட்டார்கள் இந்தியா தன்னுடைய கருத்தைத் தெரிவிப்பதிலே தமிழர்களுக்கு இது பெரிய தொரு அவர்களுடைய நிலை இதற்கு இந்தியா இரண்டகம் பண்ணுவதாக அமையும். அதை இந்தியா தவிர்க்கிறது.

இரண்டாவதாக இந்தியா பிரச்சினைகளை வெளிப்படையாகவே தன்னுடைய கருத்தைத் தெரிவிக்க முடியும். ஏனென்றால், இது ஒரு அமைப்பினுடைய திட்டமாகவே இருக்கிறது. ஒரு அடிப்படைத் திட்டமே தவிர முக்கியமாக ஒரு இறுதித் திட்டம் இல்லாத நிலையில் இந்திய அரசாங்கம் இதற்கு ஒரு முதல் முதலாகவே எதிர்ப்புத் தெரிவிக்கிறது. ஆனால், அதே சமயத்தில் இராஜதந்திர ரீதியில் இந்திய தன்னுடைய கருத்தை இலங்கை அரசாங்கத்திற்குத் தெரிவிக்கலாம்.

கேள்வி: விடுதலைப்புலிகளின் வரைவுத் திட்டத்தை இலங்கை அரசு ஏற்றால் அதன் காரணமாக அண்டை நாடான இந்தியாவின் கடல் எல்லை மற்றும் இறையாண்மையை அது பாதிக்கும் என்ற அச்சத்தை சிலர் தெரிவிக்கின்றார்கள். குறிப்பாக இலங்கை இந்தியா கடல்ப் பிரதேசத்தில் இலங்கைக் கடற்படை இந்திய கடற்படை தவிர்ந்த புலிகளின் கடற்பிரிவிற்கும் அங்கீகாரம் கிடைக்கும் விதத்தில் இத்திட்டம் அமைந்திருப்பதாகக் கூறப்படுகிறது. இதை இந்தியா விரும்பாது என்ற கருத்தும் நிலவுகிறது. இத்தகைய அச்சம் இந்திய அரசு மட்டத்திலும் நிலவு வதாக நீங்கள் கருதுகிறீர்களா?

பதில்: இருக்கலாம். மூன்றாவது கடற்படை இந்தியாவின் அண்டை நாட்டில் வருவது என்பது இந்தியாவிற்கு நல்லதல்ல. இதை இந்தியா கண்டிப்பாக விரும்பாது. ஏனென்றால் புலிகளின் அமைப்பு என்பது இந்தியாவில் தடை செய்யப்பட்டது. இந்திய அரசாங்கம் இன்னும் இலங்கையில் ஒருமித்ததொரு ஐக்கியத்தைத்தான் மேம்படுத்த வேண்டும். புலிகள் தங்களது கடற்படையினருக்கு தகுந்த ஒரு இடத்தை அவர்கள் பெறறுக் கொள்வார்களேயானால் அது இந்தியாவிற்கு சாதகமாக அமையாது. இந்தியா அதை வரவேற்காது. அதைக் கண்டிப்பாக எதிர்க்கும் என்றார்.

### புதிய...

பரிந்துரை செய்யும் பொறுப்பு சனாதிபதிக்கே பாரப்படுத்தப்பட்டுள்ளது. அரசியலமைப்பு நிர்ணய சபையில் 9பேர் அங்கம் வகிக்கின்ற போதும் பிரதமர் அமெரிக்காவுக்கு சென்றுள்ள நிலையில் 7பேர் மாத்திரம் இன்றைய கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தனர்.

சபாநாயகரின் உத்தியோக பூர்வ வாசஸ்தலத்தில் நேற்று இந்தப் பேச்சுக்கள் ஆரம்பமாகின. சபாநாயகரும், அரசியல் யாப்பு மன்றத் தலைவருமான ஜோசப மைக்கல் பெரேரா இதற்குத் தலைமை தாங்கினார். நான்கு சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்களின் தகைமை குறித்து பொலிஸ் ஆணைக்குழு சமர்ப்பித்த விதப்புரைகள் இந்தச் சந்திப்பின்போது பரிசீலனை செய்யப்பட்டன. இதன் பின்னர் பொலிஸ் ஆணைக்குழுவின் விதப்புரைகளை சனாதிபதிக்கு அனுப்புவது என்று அரசியல் யாப்பு மன்றம் தீர்மானித்துள்ளது.

### புலிகளின்...

சமாதானத்தீர்வை எட்டுவது சாத்தியமே எனத் தாம் நம்புவதாகத் தெரிவித்துள்ள அமெரிக்கத்தூதரகம், ஒஸ்லோ, ரோக்கியோ மாநாட்டு முடிவுகளின் படி இரு சாராரும் முடிந்தளவு ஓர் உடன்படிக் கைக்கு வந்து நிரந்தர சமாதானத் தீர்வை ஏற்படுத்துவார்கள் என நம்புவதாக மேலும் தெரிவித்துள் ளது.

நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையாளர் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படுமென்று அமெரிக்கத் தூதரகம் அறிக்கையில் தெரிவித்கப்பட்டுள்ளது.

இத்திட்டவரைவு குறித்து ஏற்கனவே ஐரோப்பிய யூனியன் பாராட்டுக்களைத் தெரிவிதத்துள்ளபோதும் அமெரிக்கா போன்ற நாடுகளில் கருத்துக்கள் எதிர்பார்க்கப்பட்டவையாக இருந்தன.

இதேவேளை இவ் இடைக்கால திட்டவரைவு குறித்து இந்தியாவின் அபிப்பிராயம் எதிர்பார்க்கப் படுவதாகவும் இது முக்கியத்துவமிக்கதொன்றாகவும் எதிர்பார்கக்கப்படுகின்றது.

### 2004இல்...

ளையும் மேற்கொள்ள வேண்டியிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்துக்கு அது பெற்ற வங்கிக்கடன்களை செலுத் துவதற்காக மாத்திரம் 2004ஆம் ஆண்டில் 1400கோடி ரூபாதேவைப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (32)

### வேலையற்ற...

தொகுதிமட்டத்தில் தொழில் வாய்ப்புத் திட்டம் அமுல் செய்யப்படுமென்று அமைச்சர் கூறினார். விடுதலைப்புலிகள் இடைக்கால தீர்வுத்திட்டம் ஒன்றின் மூலம் நிலையான சமாதானத்தை அடைய முற்படுவதாகவும் அதனை ஜீ.எல் .பீரிஸ் உட்பட முக்கிய பிரமுகர்கள் ஆராய்ந்து வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

# கப்டன் நிக்சன், மேஜர் செங்கோட்டையின் நினைவு நாள் மடுவில் அனுஷ்டிப்பு

(மன்னார்)

கப்டன் நிக்சனின் எட்டாம் ஆண்டு நினைவு தினமும் மேஜர் செங்கோட்டையனின் நான்காம் ஆண்டு நினைவு தினமும் நேற்று முன்தினம் மடுவில் அனுஷ்டிக்கப்பட்டது.

மாவீரர்களின் திருவுருவப் படங்களைத் தாங்கிய மாணவர்கள் அணிவகுத்துச் சென்றனர். தொடர்ந்து இந்நிகழ்வில் ஈகச் சுடரை மன்னார் மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் ஒளிவாணன் அவர்களும், வலயக் கல்விப் பணிப்பாளர் மரியநாயகம் குரூஸ் அவர்களும் ஏற்றி வைத்தனர். தேசியக் கொடியை மன்னார் மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் அ. மூர்த்தி ஏற்றி வைத்தார். திருவுருவப்படங்களுக்கான மலர் மாலையை கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் ஜேக்கப், மன்னார் மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் மூர்த்தி ஆகியோர் அணிவித்தனர்.

இந்நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

இந்த இரு மாவீரர்களின் நினைவு நாளை ஒட்டி 15 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி ஆண்டான்குளம் றோ.த.க. பாடசாலை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கருங்கண்டல் றோ.த.க. பாடசாலையும், ஆண்டான்குளம் றோ.த.க. பாடசாலையும் மோதியதில் 1.0 என்ற அடிப்படையில் ஆண்டான்குளம் றோ.த. க. பாடசாலை வெற்றி பெற்றது.

நினைவஞ்சலிக் கூட்டம் ஆண்டான்குளம் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. (மி)

# சஞ்சீவனின் நினைவாக துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ். இந்துக் கல்லூரி மாணவன் பொ. சஞ்சீவனின் ஞாபகார்த்தமாக தமிழ் மாணவர் ஒன்றியம் பாடசாலைகளுக்கிடையில் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி ஒன்றை நடாத்தியுள்ளது.

நேற்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னதாக தமிழீழ மாணவர் பேரவையின் பொறுப்பாளர் கண்ணன் பொதுச் சுடரினை ஏற்றினார். இதனைத் தொடர்ந்து தேசியக் கொடியினை யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணனும், அதனைத் தொடர்ந்து மாணவனின் உருவப்படத்திற்கான சுடரை அவரது தந்தை சோமசுந் தரமும் ஏற்றினர். இதனையடுத்து யாழ். மாவட்ட மாணவர் அமைப் பின் பொறுப்பாளர் எழிலன்பன் உரு வப்படத்திற்கு மலர் மாலை அணி வித்தார். இதனைத் தொடர்ந்து இறுதிப் போட்டிக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் மற்றும் யாழ். இந்துக் கல்லூரிதெரிவாகின. (33)

# தமிழ்-சிங்கள கலைவிழாவில் தாக்குதல் நடத்தியமை பயங்கரவாதச் செயல்

## விமலதாச தேரர் கண்டனம்

வட-கிழக்கில் யுத்தம் ஏற்பட்டபொழுது விமான மார்க்கமாகவோ அல்லது வேறு மார்க்கமாகவோ வந்து யுத்த நிலைமைகளைப் பார்வையிடாத சிங்கள வீரர்கள் தற்பொழுது கொழும்பில நடைபெற்ற சிங்கள தமிழ் கலை விழாவில் தாக்குதல்களை நடத்தியது மிருகத்தன மான செயல் என கலாநிதி விமலதாச தேரர் அறிவித்துள்ளார்.

தெற்கில் நடந்த இந்த செயல் ஒரு பயங்கரவாத நடவடிக்கை எனவும் இதை எக் காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாதென அறிவித்ததுடன், இதில் தமது அரசியல் லாபத்தைப் பெற முயற்சிப்பவர்கள் நாட்டின் சமாதானம், ஒற்றுமைகளை குழிதோண்டிப் புதைத்து மற்றுமொரு யுத்தத்தை ஏற்படுத்த முயற்சி செய்து வருகின்றபடியால் சகல மக்களும் இதை எதிர்க்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

### புலித்தேவனை...

ஹான்ஸ் பிரஸ்கரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்ட நிகழ்வின்போது, எதிர்காலத்தில் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக பேச்சுவார்த்தைகளில் புலிகள் பங்குபற்றத் தயாராக இருப்பதாகவும் அதற்கான ஒழுங்குகளை நோர்வே அனுசரணையாளர்களே மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டிருந்தார்.

இலங்கைத் தீவில் ஒரு நிரந்தரமான அமைதித் தீர்வை ஏற்படுத்துவதற்காகத் தொடர்ச்சியாகப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் நோர்வே அரசின் முயற்சிகளில் விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் பூரண திருப்தியும் நம்பிக்கையும் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில், முற்றிலும் பொய்யான செய்திகள் சமாதான முன்னெடுப்புக்கள் தொடர்பாக வெளிவருவது தமிழ் மக்களையும் நோர்வே அனுசரணையாளர்களையும் சர்வதேச சமூகத்தையும் முற்றிலும் குழப்பத்தில் ஆழ்த்தி விடுவதற்கே துணைபுரியும்.

எதிர்காலத்தில் இடம்பெறும் எந்தவிதமான சமாதானப் பேச்சுவார்த்தைகளும் நோர்வே அனுசரணையாளர்களின் பூரண ஆதரவோடும், ஒத்துழைப்போடும் இடம்பெறவேண்டும் என்பதே புலிகளினதும் தமிழ் மக்களினதும் முழுமையான விருப்பமும் நிலைப்பாடும்.

இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகள், தீர்வு முயற்சிகள் எதுவுமே அனுசரணையாளர்களுடனானதாகவும், அதிகாரபூர்வமானதாகவும் வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும் இருக்கும் என்பதை தெளிவாக முன்வைக்கின்றோம். ஊடகங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் இது போன்ற உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு அனைவரையும் குழப்பத்தில் ஆழ்த்துவதையும் நம்பிக்கையைச் சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் நாம் கண்டிப்பதோடு எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம் என அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கூட்டுப்...

படையினரால் கைதாகி காணமற்போனோர் தொடர்பான வழக்கு விசாரணைகளின் போது இந்த இருவரும் எதிராளிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளதால் இவ்விருவரும் வரும் 22ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராக வேண்டுமென ஏற்கனவே மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (33)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.